பதிவு எண் 2041 | KUDI ARASU. | தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் ரூ 3—0<br>6 மாத சந்தா ,, ரூ 1—12<br>வெளிநாட்டிற்கு ,, ரூ 4—0 | வாரப்பதிப்பு.<br>ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி. | வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.<br>கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 8<br>நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 4 | ஈரோடு, விபவ ௵ ஆனி மீ 4வ. (17—6—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 8.

இந்தியாவுக்கென்றே
தனி முறையில் தயார் செய்யப்பட்ட
ரஸ்டன்—ஹார்ன்ஸ்பி
M கிளாஸ் க்ரூட் ஆயில் இஞ்ஜின்.



சுலபமாய் ஓட்டக்கூடியது, சுலபமாய்ப் பூட்டக்கூடியது,
எண்ணைச் செலவு குறைவு,
6½ முதல் 36 குதிரை ஓட்டம் அளவுவரை
கோயமுத்தூரில் டிலவரி செய்வதற்கு
தயாராயிருக்கின்றது.

MASSEY & Co LTD
ENGINEERS

மாசி அண்டு கம்பெனி, Ltd.
இன்ஜினீயர்கள்,
திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்டு,
கோயமுத்தூர்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக்
விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால், திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக் கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0 தபால் செலவு 0—6—0.



தி. பான்ஸி வாட்ச் அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

டிடக்டாவ்
அல்லது
துப்பு இரகசியம்
அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிற ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாய்க் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் இக் கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்பேரியம் ஜி. டி, மதராஸ்.

இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

## (அயகாந்த செந்தூரம்.)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், பூஜுனி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொணடுவந்து இயந்திரத்தின் வாயிலாய்ப் பொடித்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உபயோகி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சிரோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

### இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.

2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.

3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.

4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.

5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.

6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதாரர்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

# ஆனந்த விகடன்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும். இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங் கொள்கின்றன. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ.1-0-0 வெளி நாடுகளுககு முன்பணம் ரூ 1-4-0. மாதிரி காப்பி இனும்!

விலாசம்:— 'ஆனந்த விகடன்' ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்துவிட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அரண்மனைப்பிள்ளைத் தெரு, மதராஸ்.

## முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமன்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12: மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸபர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி
தபால் பெட்டி 119, மதராஸ்.

## 'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய நேர்த்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிறதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்டால் இனும்.

ச. கோ. இ காதர்மீரு சாயபு,
ஹெட்சார்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஷூ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மென்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

# ருதுவான பின் நடந்த விவாகத்தால் இந்து தர்மம் கெடவில்லையே.

இதில் நான் ஏன் கலந்துகொள்ளவேண்டுமென்று நீங்கள் நினைக்கலாம். கலந்துகொள்ளவேண்டாமென்றாலும் 'பழைய குப்பை கூளங்களை கிண்டிக்கிளறுகிறவர்கள் நாங்கள்' என்று பெயர் வாங்கியிருக்கிறோம். அதைநினைத்துப் பழையபுராண பழங்குப்பை கூளங்கள் எங்கே கிடைக்கிறதோ அங்கே நாங்களும் போய்க் கிளற வேண்டிய அவசியமேற்படுகிறது. ஏனெனில் 'பழைய குப்பை கூளங்களைக் கிண்டிக்கிளறாதேயுங்கள். அவை தானாகவே அழிந்துவிடும்' என்று சேலம் மகாநாட்டிலுங்கூடச் சொல்லப்பட்டது. அந்த பழைய குப்பை கூளமான இதிகாச புராணங்களைக்கொண்டுதான் ஜன சமூகங்களின் சீர்திருத்தத்திற்குத் தடையாகப் பிரமாணம் காட்டப்படுவது அனுபோகமாகவிருக்கிறதென்கிறோம். அதே பிரகாரம் சம்மத வயது சட்டத்திற்கும் பழைய குப்பை கூளங்களைக் கூட்டி வைத்து அந்தச்சட்டத்தை எதிர்க்கிறார்கள். அதிலுள்ளதைக் 'குடி அரசு' ம் கிண்டிக்கிளறி விட்டு விட்டால் எடுத்துக் கொள்ளுகிறவர்கள் இஷ்டமானதை எடுத்துக்கொள்ளட்டும்.

ஸ்ரீ சங்கார மடத்துச்சாஸ்திரிகளும், ஜீயர் மடத்துப் பண்டிதர்களும், அவர்கள் சிஷ்ய கோடிகளும் சம்மத வயதுச் சட்டத்திற்கு விரோதமாக இந்து மத இதிகாச புராணங்களை உபமானம் கூறி, கன்னிக் கலியாணம் நடவாவிட்டால் இந்துமத சநாதன தர்மம் கெட்டு, வைதீக கர்மங்கள் நடவாமல் இந்து மதமே அழிந்துபோய் விடுமென்கிறார்கள். இப்பொழுது வைதீக தர்மங்கள் நடந்து வருவது போல் சம்மத வயது சட்டத்தால் கெட்டுப்போகுமென்றும் சொல்லுகிறார்களே. அவர்கள் சொல்லுவதுபோல கெட்டுத்தான் போகுமா? கெடாமலிருப்பதற்கு அந்த இதிகாச புராணங்களில எதாவது ஞாயமில்லையா? இந்து தர்மத்தில் தானில்லையா? அதை அனுஷ்டித்துக் கெடாமலிருக்கும் இந்து பெரியவர்கள் இல்லையா என்பதையும் கிண்டிக்கிளறிப் பார்ப்போம். பூர்வீகத்திலும் பூர்வீக கதைகளான இருடிகளின் ரிஷி மூலத்தைக் கிளறாமல் விட்டு விடுவோம்.

விவேகானந்த சுவாமிகள் சொன்னதுபோல், முற்காலத்திய பிராமண க்ஷத்திரியர்கள் மறைந்து விட்டார்கள். ராஜரிஷி பிர்மரிஷி ஸ்தானமாயும் ஆரிய வர்த்தமாயும், ஸ்ரீ கிருஷ்ணன் புத்தன் இவ்விருவர்களுடைய ஜன்ம பூமியாயுமிரா நின்ற விந்திய இமயமலைகளுக்கு நடுவிலுள்ள மத்தியப் பிரதேசம் மௌனமாய்விட்டது. மௌனமாகவே இந்தியாவின் தென்கோடியிலே மாறுபட்ட நடையுடை பாவனைகளுடைய ஜாதிகளிலிருந்து பூர்வீகப் பிராமண வம்ச பாரம் பரியத்துடன் சம்பந்தம் பாராட்டுங் குலங்களிலிருந்தும் ஈனஸ்திதியடைந்து விட்ட பௌத்தமதத்திற்குப் பிரதிவாதிகள் கிளம்பினார்கள். இத்தென் தேசத்தாராலேயே வேதமானது இந்தியாவிற்கு வேதாந்தரூபமாய் மறுபடியும் கொண்டுவரப்பட்டது. தெற்கிலிருந்து வந்த இந்த மத சீர்திருத்தமானது பிராமணர்களுக்கு மாத்திரம் அநுகூலமாயிற்று. மற்ற இந்திய மகா ஜனங்களுக்கோ அவர்கள் முன் பார்த்திராத விலங்குகளை உண்டாக்கி விட்டது. இந்த இடத்தை ஊன்றிப்பார்ப்பவர்கள் 'குடி அரசில்' குற்றம் காணமாட்டார்கள். இந்து மதத்தைச் சீர்திருத்தினவர்களில் சங்கரரும் ராமானுஜரும் முதன்மையானவர்கள். இவர்களுக்கும் சம்மத வயதுச் சட்டத்திற்கும் உள்ள சம்பந்தத்தை கீழே சொல்லுகிறேன். இவர்கள் பாலிய விவாகத்தின் கெடுதல்களால் உண்டாகும் தீங்குகளை எழுதியும் சொல்லியும் வந்திருக்கிறார்கள் என்பது உங்களுக்கும் தெரியும். இப்பொழுது பண்டிதர்கள் சநாதன தர்மமும் இந்து மதமும் கெட்டுப் போய் விடுமென்கிறார்களே, அதைப்பற்றி மட்டும் கவனிப்போம்,

மனு, ஆங்கிரசு, வியாசர், கௌதமர், அத்திரி, உசநசு, இமயர், வசிஷ்டர், தக்ஷர், சம்பவர்த்தர், சாதாதபர், பராசர், விஷ்ணு, ஆபஸ்தம்பர், ஆரீதர், சக்ரர், காத்தியாயனர், பிருகு, வருணர், நாரதர், யாஞ்ஞவற்கியர், போதாயனர், பிரமா, சுமந்து, கசியபர், பபுரு, பைட்டீநசி, வியாக்கிரர், சத்திரவிரதர், கார்க்கியர், கார்ஞசிகர், ஜாபாலி, ஜமதக்னி, லோகாக்ஷி, பிரமசம்பவர், இந்த 36 பேரும் இந்து தருமசாஸ்திரமென்னும் ஸ்மிருதிகள் செய்தவர்கள். இவர்களோடுகூட வச்சர், மரீசி, தேவலர், பாரஸ்கரர், புலஸ்தியர், புலவர், இருசியசிருங்கர், சாலேயர், ஆத்திரேயர், தாருவாசர் முதலியவர்களும் தரும நூல் செய்திருக்கிறார்கள். இவர்கள் செய்ததும் வேத பிரமாணத்திற்கு ஒத்ததாகவே சொல்லப்பட்டது. இதுவுமல்லாமல் நல்ல ஒழுக்கம் உலகத்தில் நடைபெற இடபம், எச்சம் முதலியவற்றை செய்தவர்கள். உமாகேசர், நந்தி, குமரர் கண்ணுவர், பிறகு, மார்க்கண்டேயர், பிரஸ்பதி, குணி, குணியாகு, சுமந்து, ஜைமினி, புலத்தியர், அகத்தியர் வாலகில்லியர், விதுரர், வைசம்பாயனர் இன்னும் பலராவர். இத்தனை பேர்களில் அநேகர் சரித்திரம் இங்லீஷ் படித்த புரோபஸர்களுக்குத் தெரியாவிட்டாலும் சாஸ்திரிகளுக்குத் தெரியும். யார் எழுதினதாயிருந்தாலும் எந்தக்கதைகளிலும் சாஸ்திரங்களிலும் இவர்கள் பெயர்களே வருகிறபடியால் ஆரியமதத்தை வியாபிக்கச் செய்தவர்கள் இவர்களே. இவர்களுடைய பிறவியும் இவர்களில் சிலரின் இல்லற வாழ்க்கையும் பக்குவமான பெண்களையே முதல் முதல் கொண்டதாகத் தெரிகிறது. அதனால் இந்து தருமமோ மதமோ கெட்டுவிடவில்லை. இவர்களை ஆஸ்திகர்கள் அல்லவென்று சொல்லவும் முடியாது. இப்பொழுது ருதுவான பின் கல்யாணம் நடந்தால் இந்து மதம் அழிந்து போய்விடுமென்று சொல்லும் பண்டிதர்களின் வார்த்தையை அவர்களிடம் ஒப்பிட்டுப்பார்த்தால் இந்து மதத்தில் ஒரு தூசிகூட மிஞ்சுவதற்கு ஏதுவில்லை. இதுவும் போகட்டும்.

வேதத்தை விளக்கினவர் வியாசர். வியாசரில்லாவிட்டால் வேதத்தின் பெருமை விளங்காது. அவர் பராசருக்குப் பிறந்ததை நினைத்தால், பண்டிதர்கள் ருதுமதி விவாகம் செய்தால் வேதமே கெட்டுப்போகுமென்பது சரியல்லவே. பராசரை நாஸ்திகர் என்று சொல்லமுடியுமா? பிதிர்கர்மம் செய்ய வியாசர் அருகதையுடையவரல்லவென்றும் பிதிர் தேவதைகள் கர்மத்தை ஏற்றுக்கொள்ளார்களென்றும் பண்டிதர்கள் சொல்லுவார்களா? அதுவும் போகட்டும்.

நான் எழுதுவதை மதப் புரட்டென்று சொல்லப்புறப்பட்டிருக்கிறார்கள். அவை சகஜமே. நீங்கள் மனம்வைத்து நான் எழுதுவதிலுள்ள இலக்கிய இலக்கணப் பிழையைத் தள்ளி கருத்தை ஆலோசிப்பீர்களானால் எதற்கும் 'மதம் போச்சு' என்கின்றதின் உண்மையும் மதத்திற்கும் மதத்திலுள்ளதற்கும் இவர்களுக்குமுள்ள சம்பந்தமும் விளங்கும்.

புத்த மதத்தால் முழுகிப்போன இந்து மதத்தை நிலைநிறுத்தின தென்தேசத்தவர்களில் சங்கரரும் ராமானுஜாச்சாரியும் முதன்மையானவர்கள் என்பதை முன்னே சொன்னேன். சங்கரர் தகப்பனில்லாமல் வரப்பிரசாதத்தால் வயது வந்த பெண்ணிற்கே பிறந்தவர். அவருடைய அக்காள், தங்கை, பந்து, ஜாதி முழுவதும் இன்றைக்கும் பெண்களை ருதுவான பின்பே விவாகம் செய்து கொள்கிறார்கள். சங்கரருடைய ஜாதியான நம்பூதரிப் பாப்பானே எல்லா ஜாதிபாப்பானைவிட உயர்ந்த ஜாதி. அந்த ஜாதி மலையாளத்தில் மற்றெல்லா ஜாதிகளுக்கும் எவ்வளவு துன்பங்களைச் செய்தாலும் பாப்பார்களின் நித்திய கர்மங்களில் ஸ்நானம், வேதப்படிப்பு, தேவி உபாசனை, அன்னிய தேசயாத்திரை செய்யாமை முதலியவைகளில் மற்றப்பாப்பாரைவிடப் பற்றுடையவர்கள். அவர்களால் இந்து மதம் கெடவுமில்லை. நாஸ்திகர்களாகவுமில்லை.. இந்துமத சீர்திருத்தக்காரராய் உலக குருவென சொல்லப்பட்ட சங்கரர் ஜாதிக்கும் அவருக்கும் ஒரு தருமசாஸ்திரமும், மற்றபாப்பார்களுக்கெல்லாம் வேறு இந்து தரும சாஸ்திரமுமா? இப்படி இருக்க காரணமென்ன? குருவுக்கு ஒரு மாதிரியாகவும் சிஷியர்களுக்கு ஒரு மாதிரியாகவும் கர்மங்களிருக்குமா? இவர்கள் கர்மங்களை ஏற்றுக் கொள்ளுகிற தேவதைகள் சங்கரர் ஜாதிக்கும் மற்ற பாப்பார ஜாதிக்கும் ஒன்றாக இல்லாமல் தனித்தனியாகவிருக்கிறதா? பிதிர்லோகமும் பிதிர் தேவதையும் ஒன்று இரண்டா? மந்திரங்கள் எத்தனை? இதைத்தேசாச்சார மென்று சொல்லி, ஒழுக்கமில்லாதவன், ஆசாரமில்லாதவன், அடிமை என்று சொல்லப்படுகிற சூத்திரனை ஏமாற்றலாமே ஒழிய பிதிர் லோகத்தையும் தேவ உலகத்தையும் எப்படி ஏமாற்ற முடியும்? அந்தத் தேசாச்சார மென்று சொல்லமுடியாதே. சட்டத்தைப்புரட்டும் வக்கீலும் பொய் சாட்சி சொல்லும் கோர்ட்டும் அங்கிருக்குமா! ராமானுஜாச்சாரியாருடைய முக்கிய சிஷியரான கூரத்தாழ்வாரைப்பற்றி நீங்கள் கேட்டிருப்பீர்கள் இவர் பெரும் தனிகர். ஜாதியில்தள்ளப்பட்ட ருதுவான அய்யங்கார் பெண்ணையே விவாகம் செய்து கொண்டார். உடையவர் சொல்ல இவர் பாஷியமெழுதினார். உடையவர் தவறின இடத்தில் சரியான அர்த்தத்தை ஜாடையாக உடையவருக்குஎடுத்துக்காட்டின பெருமையும் இவருக்குண்டு. பெருமாள் தன் பிரசாதம் இவர் குடிசைக்கு இவர் பசித்திருக்கையில் அனுப்பினார் என்னும் கதையும் உண்டு. பெருமாளின் உத்தரவால் பிரசாதம் வந்த உடனே பெண்ஜாதியைப்பார்த்து, "அடி பெண்ணே! கூலிச்சோற்றுக்கு ஆசைப்பட்டாயா?" வென்றார். அவ்வுத்தமி கற்பிற்கரசி. இந்து தர்மத்தை பர்த்தாவுடன் தவறாமல் செய்த அம்மணி. அவர் பாதங்களில் பணிந்து, "தாங்கள் பசித்திருப்பதாகநினைத்தேன்." என்றார்கள் "நீ நினைத்த கூலியை நீயும் பெறுவாயாக" என்று அந்த பிரசாதத்தை அந்த அம்மாளுக்கும் கொடுத்தார். அதன் விசேடத்தாலே பட்டர் பிறந்தார். இவர்கள் விட்டு விட்ட வேத பாகங்களுக்கெல்லாம் பட்டர்வியாக்கியான கர்த்தாவுமானார். கூரத்தாழ்வாரும் பட்டரும்நாஸ்திகர்களல்ல. ருதுவான பின் மணந்து கொண்ட ஒருபெண்ணின் எண்ணத்திற்கு பெருமாள் அடிமையானார். அந்தப்பெண்ணை விவாகம் செய்து கொண்டவரும் அவர்கள் வயிற்றுப்பிள்ளையும் இல்லாவிட்டால் வைணவத்திற்கும் இந்து மதத்திற்கும் பெருமையேது? பொங்கலேது? புளியோதரை ஏது? அக்கார அடிசலும், அழகர் மலைத் தோசையும், பள்ளியறைத் தனிச்சேவையுமேது? இத்தனைக்கும் பரிகாரமாகப் படுத்துப் புரளும் பாக்கியமுமேது? சீரங்கத்து லாட்டரிசீட்டுதான் பிரிக்க முடியுமா? சாமி பேரால் பூமி வாங்கினாலும் பாப்பானே தின்பது அவர்கள் பேரைசொல்லியல்லவா? இத்தனையும் தெரிந்தும் அய்யங்காரும் ஆச்சாரிகளும் ருதுவான பின் விவாகமானால் மதமழிந்து போகுமென்று ஏன் கூச்சல் போடுகிறார்கள் ?

இராமயணத்தைச் சம்மத வயதிற்கு உபமானமாகக் கூறுகிறார்கள். இராமாயணத்தைப்

இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

# அடக்கமும் திருவள்ளுவரும்.

சாமி சிதம்பரனார் எழுதுவது

கட்டுரை 14.

உடலின் வன்மையைக் கொண்டு தீச்செயல்களைச் செய்யாமலிருத்தலும், சொல்லின் திறத்தால் கெடுதியை யுண்டாக்கும் சொற்களைச்சொல்லாதிருத்தலும், அறிவின்மிகுதி கொண்டு, மனத்தால், மக்களியற்கைக்குப் பொருந்தாத குற்றமுள்ள செய்திகளைக் கொஞ்சமும் எண்ணாதிருத்தலும் அடக்க முடைமை எனப்படும். சுருக்கக்கூறின், தீமையிற் செல்லாமல் அடங்கியிருப்பது அடக்க முடைமை என்று கூறலாம். இதை விடுத்து, நன்மையும் வேண்டாம் தீமையும் வேண்டாம், கொல்லை பாழானல் குருவிக்கு மேய்ச்சலற்றுப் போகுமா? என்று கூறிக் கொண்டு ஒன்றுஞ் செய்யாமல் வாளாவிருப்பதற்கு அடக்கமுடைமை யென்று கூற வொண்ணாது. நன்மையான செயல்களைச் செய்வதற்குக் காலமும் வேண்டாம், நாளும் வேண்டாம். யாருடைய எதிர்ப்பு நேர்ந்தாலும் சிறிதும் அஞ்சாது எண்ணிய அப்பொழுதே உறுதியுடன் தொடங்கவேண்டும். இதுவே அறிஞர்களின் கொள்கை. நன்மையுஞ் செய்யாமல் தீமையுஞ்செய்யாமல் அடங்கியிருக்கின்றேன் என்று சொல்லிக கொள்வோரை, சோம்பேறிகளென்றோ அல்லது கோழைகளென்றோ அல்லது ஆண்தன்மையற்றவர்களென்றோ கூற அறிஞர்கள் பின்வாங்கமாட்டார்களென்பது திண்ணம்.

தீயசெயல்களிற் செல்லாது அடங்கியிருப்பவன் அறிஞர்கள் பலராலும் போற்றப்படுவான். இவ்வடக்கமின்றிக் கெட்ட வழியிற் சென்றால் பலராலும் இழுக்கப்பட்டுத் துன்புறும் நிலைதானே வந்து சேரும். இன்பவாழ்வைச் சுவர்க்கவாழ்வென்றும் துன்ப வாழ்க்கையை நரக வாழ்க்கையென்றும் கூறுவது பொருந்தும். சொர்க்கமென்று எங்கேயோ ஒன்று இருப்பதாகவும் நரகமென எங்கேயோ ஒன்ற யிருப்பதாகவும் கூறும் புனைந்துரைகளை நாம் நம்புவதற்கில்லை. சொர்க்கமும், நரகமும் இவ்வுலக வாழ்விலேயே அமைந்துள்ளன. இன்பமடைவது சொர்க்கம்; துன்பமடைவது நரகம். அடக்கத்தின் பெருமையை திருவள்ளுவர் (1) 'அடக்கமாகிய அறம் தேவர்கூட்டத்திற் செலுத்தும்; அடங்காமையாகிய தீமை நரகத்திற் செலுத்திவிடும்' என்று கூறுகின்றார்.

பொதுவாக நோக்குங்கால் மக்கள் அனைவரும், செல்வப் பொருளையே மிகவும் பேணிக் காப்பாற்றுகின்றனர். ஆனால் காப்பாற்றவேண்டிய முதன்மையான உயர்ந்த பொருள் அடக்கமாகிய செல்வமே யாகும். அடக்கமின்றித் தீயசெயல்களை அஞ்சாது செய்கின்றவர், எவ்வளவு பெருஞ் செல்வத்தை உடையவராயினும், யாருங் கைப்பற்றாதவாறு எப்படிக் காப்பாற்றிவரினும், அச்செல்வங்களனைத்தையும் இழந்து, துன்பமடைவாரென்பது திண்ணம். ஏனெனில் தான்செய்கின்ற கெட்ட செயல்களாற்பகைவர்கள் மிகுதிப்பட்டு விடுவார்கள். பகைவர்கள் மிகுதிப்படவே நட்பினர்களும் குறைவார்கள். ஆகவே மிகுதியான பகைஞர்களால், பல வகையாலும் செல்வத்தையிழக்கநேரும். ஆகையால் எந்த மக்களுக்கும் செல்வமாக இருப்பது அடக்கமேயாகும். இதனை (2) "அடக்கத்தையே பொருளாகக் காக்கவேண்டும். ஏனெனில், உயிர்களுக்கு அதனைவிட வேறு செல்வமில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

அடக்கமுடைமையே புகழைத்தருவது. புகழ் என்பது எல்லாமறிந்த அறிஞர்களால் குற்றமற்றவர் என மதிக்கப்படுவதனுல் வருவதாகும். கெட்டசெயல்களைச் செய்யும் அடக்கமற்ற அறிவில்லாதவரைப் பேரறிஞர்கள் ஒருபொருளாக எண்ணமாட்டார்கள். தீங்கில்லா அடக்கமுடைய நல்லோரை அறிஞர்கள் அனைவரும் புகழ்ந்து கொண்டாடுவார்கள். அறிஞர்களாற் போற்றப்படும் புகழ்ச்சி என்றும் அழியாது நிலைநிற்பதாகும். ஆதலால் புகழ்பெற விரும்புவோர் யாவரும் அடக்கமுடையவராக நடந்துகொள்ள வேண்டும். இதனை (3) "அறிவுடைமையை அறிந்து முறையாக அடங்கி நடப்பதைப்பெற்றால் அடக்கமுடைமை அறிஞரால் அறியப்பட்டுப் பெருமையைக் கொடுக்கும்" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

தனது இயற்கைநிலையாகிய நன்மையினின்றும் தவறாமல் அடங்கி நடப்பதால் வரும்புகழ் அளவிடற்கரிதாகும். உலகில் உயர்ந்து காணப்படுவது மலை, அது தூரத்திலிருக்கும் பலராலும் காணக்கூடியதாகும். அதனிடம் பலவகையான செல்வப்பொருள்கள் மலிந்துகிடக்கின்றன. மழை பெய்தாலும் பெய்யாவிடினும் அருவியின் மூலமாக நீர்வளத்தை யளித்துக்கொண்டிருக்கும். உலகில்மழை பெய்வதற்குக் காரணமாகவிருப்பதும் மலை. அது வானிற்செல்லும் மேகங்களைத் தடுத்து மழையைப் பெய்விக்கின்றது. அன்றியும் பல உயிர்ப்பொருள்களுக்கும் உறைவிடமாக விளங்கி நிற்கிறது. அதை யடுத்துவாழும் மக்கள் பிணியின்றிக் கட்டமைந்த ஆக்கையும், தளராவூக்கமும் உடையாராய் வாழ்கின்றனர். அதைப் போல அடக்கமுடையவர்களும், பலராலும் புகழப்பட்டும், பலர்க்கு உதவியாளராகவும், சிறப்புடன் வாழ்வார்கள். ஆகவே அடக்கமுடையவர்களின் தோற்றத்தை மலையினும் பெரிதென்றே கூறவேண்டும். இதனை,

4. "நல்ல நிலைமையிலிருந்து மாறுபடாமல் அடங்கிய வனது தோற்றம் மலையை விடமிகவும் பெரியதாகும்." என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

அடக்க முடைமையாகிய தன்மை எல்லோருக்கும் நன்மையைத் தருவதாகும். அதிலும்அத்தன்மை செல்வர்கள் பாலமைந்திருக்குமாயின் மிகவும் சிறப்புடையதாகும். அது சிறப்பைத் தரக்கூடிய செல்வத்தோடு, பெருஞ்சிறப்பையளிக்கக்கூடிய பிறிதொரு செல்வம் அமைந்ததையொக்கும். செல்வமுடையவர்களின் அடக்க முடைமையாகியபணிவுடைமையையும், யாவர்க்கும் எளிதாக விருக்கும் தன்மையையும் கண்டாரனைவரும் வியந்து "பெருஞ் செல்வராயிருக்கின்ற இவர் எவ்வளவு அடக்கமுடையவராயிருக்கின்றார்" என்று கூறுவார்கள். ஆகவே மற்றவர்கள் எவ்வாறிருப்பினும், செல்வர்கள் அடக்கமுடைமையைப்பெற்றிருத்தல் மிகவும் இன்றியமையாததாகும். இதனை (5) "அடக்கமுடைமை யாவர்க்கும் நன்மை பயக்கும்; செல்வமுடையவர்களுக்கு மற்றொரு செல்வம் அமைந்ததையொத்த பெருமையுடையதாகும்." என்று திருவள்ளுவர் கூறுகிறார்..

மெய், வாய், கண், மூக்கு, செவி, யென்னும் ஐந்து பொறிகளையும், தன் விருப்பப்படி அடக்கியாளுந்தன்மையைப் பெற்று விட்டால் அடக்கமுடைமை தானே வந்துவிடுமென்பது திண்ணம். இவ்வாறு ஐந்தையும் அடக்கியாளுந் தன்மையை ஒருவன் பெற்றுவிட்டால் எக்காலத்தும் இன்பவாழ்வை எய்தலாம் என்பதை திருவள்ளுவர் (6) ஒன்றாகிய தன்னுடம்பில் நான்குறுப்புகளையும் அடக்கிக் கொள்ளும் ஆமையைப் போல, ஐம்பொறிகளையும் அடக்கினால், எழுகின்ற பிறப்புக்கள்தோறும் நன்மையுண்டு." என்று கூறுகின்றார்.

எல்லா வடக்கத்திலுஞ் சிறந்தது நாவடக்கமாகும் நாவடக்க மில்லாதவர் எப்பொழுதும் துன்பநிலையை எய்து வார்கள். யாரிடத்தில் உரையாடினாலும், அவர்கள் தன்மையை யறிந்து அவருக்கேற்றவாறு உரையாடுவதே நன்மையாகும். யாவரிடத்தும் காலமறிந்து பேசவேண்டும். சிலருடைய இயல்பை யறியாமல் ஏதேனும் சொல்லிவிட்டால், அதற்கவர் சினந்து, கடுஞ்சொற்களைக்கூறிவிடுவாராயின் நாமே நமது குற்றத்தை எண்ணி எண்ணித் துன்பமடைவோம். நம் சொல்லால் நாம் இகழப்பட்ட குற்றம் மனத்தைப் புண்படுத்துவது போல மற்றொன்றும் புண்படுத்தாது. இதனை (7) "வேறு எவற்றைக் காக்கா விடினும் நாவினைக்குற்றம்படாமற் காத்துக் கொள்ள வேண்டும். காவா விட்டால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் தாமே வருந்துவார்கள்." என்றுதிருவள்ளுவர் கூறுகிறார்.

தீய சொற்களைக் கருதாமல் நன் மொழிகளையே மொழிகின்றவர்கள் ஒரு காலத்திலும் தீய சொற்களைச் சொல்லுதல் கூடாது. குற்றமேநிறைந்தவர்கள் பால் எவ்வளவு குற்றங்கள் புதிதுபுதிதாகத் தோன்றுமாயினும் அதை உலகினர்பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால் குற்றமே இல்லாத சான்றோர்கள் பால் ஏதேனும் ஒரு சிறு குற்றம் காணப்படுமாயினும், அது உலகினர் யாவராலும் கூர்ந்து நோக்கப்படும். ஆனதால் நல்லவர் என்று பெயர்வாங்கினவர் எப்பொழுதும் நல்லவராகவேயிருக்கவேண்டும். நல்ல சொற்களையே பாராட்டுகின்றவர்கள் எப்பொழுதாவது ஒருமுறை, தீமைபயக்குஞ் சொற்களைக் கூறுவார்களாயின், அவர்கள் நல்ல மொழிகளைப் பேசிக்கொண்டிருந்ததன் பயன் முழுவதும் வீணாகும். இதனை, (8) "ஒன்றாலும் தீய சொல்லின் பொருட் பயனால் பிறருக்கு தீங்குண்டாகுமாயின், நன்மை யெல்லாம் தீமையாக முடிந்துவிடும்." என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

அடிப்பது ஒருவருக்குப் பெருந்துன்பத்தைத் தராது. இடித்துரைப்பதுவே துன்பத்தைத்தருவதாகும். விலங்கின் தன்மை யுடையவரையே அடிப்பதனால் அஞ்சவைக்கலாம். அறிவுடையவர்கள் சொல்லுக்கே மிகவும் அஞ்சுவார்கள். ஒருவரை அடித்துப் புண்படுத்தினாலோ அல்லது நெருப்பினாற் சுட்டாலோ அப்புண் இயற்கையாகவோ, அல்லது மருந்தினாலோ ஆறிவிடுதல் இயற்கை. ஆனால் கடுஞ் சொல்லைத் தாங்காதவரை ஏதேனும் இழித்துரையால் வைதுவிட்டால், அதனால் அவர்க்குண்டாகும் மனப்புண்ணை எந்த வகையாலும் ஆற்ற வொண்ணாது. அபபுண் எப்பொழுதும் மனத்திற்குள்ளிருந்து கொண்டு துன்புறுத்திக் கொண்டே இருக்கும். இதனை (9) "ஒருவனைத் தீயினால் சுட்ட புண், உடம்பின்கண் வடுவாகக் காணப்படினும் மனத்தின்கண் ணில்லாது ஆறிவிடும். ஆனால் நாவினாற் சுட்ட புண் ஒருநாளும் ஆறாது." என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

எல்லா தீமைக்கும் முதன்மையாயிருப்பது சினம். சினமென்பது உள்ள முழுவதையுந் தன் பாற்கவர்ந்து, எல்லாத்தன்மைகளையும் தனக்குக் கீழ்ப்படுத்தித் தானே முதன்மையாக மேலிட்டு நிற்கும் இயல்பு வாய்ந்தது. சினத்தின் வசப்பட்டார் யாரும் தப்பிப்பிழைத்தல் அரிது. அம்மம்ம! அதன் கொடுமையை என்னென்றுரைவது! ஆகையினால் கற்றவர்க்கழகு சினமின்றியிருத்தல். சினமே இல்லாதவர் உலகவாழ்க்கைக்கு ஏற்றவரல்லர். ஆதலால், சினமின்றி யிருத்தல் என்பதற்குச் சினத்தை அடக்கியாளுதல் என்பதே பொருளாகும். கற்றவர்கள் சினமுடையவராயின், அவர் கற்றவரென்று மதிக்கப்படமாட்டார். கற்று சினமின்றி அடங்கி வாழ்வாரையே அறம் முன் பற்றி நிற்கும். இதனை, (10) "வெகுளியைக் காதது, கற்று அடக்கமுடையவனாயிருப்பவனை அடைவதற்கு, அறம் கருதி முறையாகக் காலத்

லால்குடியில் ஜூன்- 9, 10 தேதிகளில்
நடைபெற்ற
லால்குடி தாலூக்கா
பார்ப்பனரல்லாதார்
முதலாவது
சுயமரியாதை மகாநாட்டின்
தலைவர்
திரு. பி. டி ராஜன் பி, ஏ, ஆக்ஸன்
எம், எல், ஸி. அவர்கள் நிகழ்த்திய

# சொற்பெருக்கு.

---

வரவேற்புக்கழகத் தலைவர் அவர்களே,
சீமாட்டிகளே! சீமான்களே;

உங்களுடைய மகாநாட்டிற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்டு நீங்கள் எனக்குச் செய்திருக்கிற பெரிய மரியாதைக்காக நான் உங்களுக்கு வந்தனங் கூறுகிறேன்.

நான் இப்பொழுது சொல்லப்போகிற காரணங்களாலே உங்களுடைய அழைப்புக்குச் சம்மதிக்கு முன்னர் நான் சந்தேகமாய ஆலோசனை செய்தேன், பின்னர் உங்களுடைய வற்புறுத்திய வேண்டுகோளாலும் நமதுபெருமை தங்கிய நண்பர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் வேண்டுகோளாலும் நான் சம்மதித்தேன்

என்னுடைய சந்தேகமான ஆலோசனைக்குக் காரணங்கள் பின் வருமாறு, நான் சமூக சீர்திருத்தைப் பற்றி மாத்திரம் பேசுவதாக நீங்கள் எதிர்பார்த்தீர்களா அல்லது சமூக சீர்திருத்தத்தையும் அரசியல் சீர்திருத்தத்தையும் சேர்த்து பேசுவதாக எதிர் பார்த்தீர்களா என்பது எனக்கு தெரியாது. திருவாளர் ஈ. வெ. ராமசாமிநாயக்கர் அவர்களைப்போன்ற என்னைவிட வல்லமையுள்ளவர்கள் உங்களுக்கு தக்கவழி காட்டும் ஆற்றலுடையவர்களாயிருப்பார்கள் என்றும் நான் உணர்ந்தேன்.

சுயமரியாதை இயக்கமானது நமது நண்பர் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர்களாலே தொடங்கப்பெற்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்களை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவாவது அல்லது பொதுவாக நமது தேசத்திற்கும் முக்கியமாகப் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கும் அவர்கள் செய்து கொண்டு வருகிற அளவற்ற தேசத்தொண்டுகளைப்பற்றியாவது நான் சொல்லத் தேவையில்லை.

இந்த இயக்கத்தை உண்டு பண்ணினவர் திரு, நாயக்கர் அவர்களாயிருக்கிறதால் இந்த இயக்கம் முதலில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தாருடையதென்றும் இது மற்றொரு குறிப்பிட்ட சமூகத்தாருக்கு விரோதமாக நடத்தப்படுவதென்றும் பிறழ நினைக்கப்படுவதாயிருப்பதை நான் முதலில் உங்களுக்குச் சொல்லுகிறேன், திருவாளர் பனகால் ராஜா அவர்களைப்பார்க்கிலும் திருநாயக் அவர்கள் பெரிய பார்ப்பன விரோதி என்று அழைக்கபபடுகிறார். அவர்களை அப்படிச்சொல்வது ஒரு பெருங்குற்றமாகும். அவர் பார்ப்பனருக்கு விரோதி அல்ல. ஆனால் பார்ப்பன மதமானது ஒரு ஜாதியாரை மாத்திரம் உயர்வுப்படுத்த நிலைநிற்குமானால் அதைப் பின்பற்றுபவர்களை பார்ப்பனரானாலும் பார்ப்பனரல்லாதாரானாலும் திரு. நாயக்கர் அவர்கள். அந்த மதத்திற்கு நிச்சயமாக எதிரிதான்.

இப்பொழுது மக்களுடைய முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கிற பழக்க வழக்கங்களும் முறைகளும் முன்னொரு காலத்தில் எவ்வளவு உபயோகமுள்ளவைகளாயும் அவசியமானவைகளாகவுமிருந்தாலும் இப்பொழுது அவைகளுக்கெல்லாம் அவர் எதிரானவர்தான். இந்த இயக்கம் ஒரே சமூகத்தாருடையதாக இருக்கிறதற்குப்பதிலாக நமது தேசீய வாழ்க்கையில் அரசியல், சமூகசீர்திருத்தம், சிக்கனம், மதம் முதலான அனேக வகைகளிலும் தாக்கக்கூடிய அளவு விரிவானதாயிருக்கிறது. இந்த இயக்கத்தின் எண்ணங்களும் கொள்கைகளும் காலஞ்சென்ற திருவாளர் டாக்டர் நாயரவர்களாலும். சர். பி. டி. தியாகராயசெட்டியார் அவர்களாலும் தொடங்கப்பெற்றுள்ள பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் கொள்கைகளைப் போலவே இருக்கின்றன. அவ்வியக்கத்தின் தொடக்கத்தில் அரசியல் பற்றியே மிகுதியான காலம் சென்றது. பின்னால் தோன்றிய இந்த இயக்கத்தில் நமது தேசீய நோக்கங்களிலுள்ள சமூக சீர்திருத்தத்தின் சார்பாகவே அதிகமான கவனம் செலுத்தப்படுமானால் அதற்கு காரணம், அரசியல் குறைகளைவிட சமூக சீர்திருத்தத்திலுள்ள கெடுதிகளே நிரம்பவும் கெட்டவைகள் என்றும் இவைகளை நீக்குவதே நம்மை அரசியல் வெற்றிக்கு அருகில் கொண்டுசெல்லும் என்றும் திரு. நாயக்கர் அவர்கள் உணர்வதே ஆகும். இந்த இயக்கமானது பார்ப்பனரல்லாத மக்களை அவர்களுடைய நெடுங்காலப் பெருந் தூக்கத்திலிருந்து முன்னமே எழுப்பிவிட்டது. மக்கள் தங்கள் சுதந்திரங்களையும் கடமைகளையும் உணர்ந்துகொள்ளும்படி செய்துவிட்டது. ஒவ்வொரு ஆண் மகனும் ஜாதி வேற்றுமை இல்லாமல் தனக்கு மிகப்பொருத்தமான எந்தத்தொழிலையும் எடுத்துக்கொள்ளும்படியாகவும், தேசத்தின் பொது நன்மைக்காகத் தன்னால் இயன்ற சிறிய கடமையை செலுத்தும்படியாகவும் உள்ள நலன்களின் உரிமைகள் எல்லா மக்களுக்கும் சமத்துவமாக இருக்கவேண்டுமென்றுமே இந்த இயக்கம்கேட்கிறது. முடிவாக இந்த இயக்கமானது மக்களை சமூக அடிமைத் தனத்திலிருந்து விடுவிப்பதையும் தேசத்தின் அரசியல் சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதையும் அடிப்படையாகக்கொண்டது. இவ்வியக்கத்தின் பலனாக பார்ப்பனப் புரோகிதர்களின் பூசாரித்தனங்கள் கொஞ்சங்கொஞ்சமாக கைவிடப்பட்டு வருகின்றன. பணச்செலவானதும் அனாவசியமானதுமாயுள்ள சடங்குகள் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த நாட்களில் திருமணங்கள் மணமக்களுக்குச் சொந்தமான ஜாதியிலுள்ள புரோகிதர்களையே கொண்டு நடைபெறுகின்றன. சில இடங்களில் இதுகூடகிடையாது. வழக்கமான மதச்சடங்குகளுக்குப் பதிலாக பெரியோர்களுடைய வாழ்த்துதல்களையே கொண்டு திருமணங்கள் முடிவு பெறுகின்றதாகத் தோன்றுகின்றது. இந்த சுலபமான கொள்கையை நான் நிச்சயமாக ஒப்புக்கொள்வதோடு பாராட்டவும் செய்கிறேன். ஏனென்றால் இது இந்துமதச்சடங்குகளின் கஷ்டங்களையும்பணச்செலவுகளையும் இல்லாமல்செய்கிறது. எல்லாவற்றிற்கும் இவ்வகைத் திருமணங்களில் வார்ஸ் உரிமை பெறுங்காலங்களில் யாதொரு துன்பங்களும் வாராதபடி இத்திருமணங்களைச் சட்டப்படி உரிமையானதாக்குமாறு தேசச்சட்டங்களைத் திருத்தியமைத்துக் கொள்ளும்படி எனது நண்பருக்கு எச்சரிக்கை செய்கிறேன். பிறப்பினால் உயர்ந்தவர்கள் என்பதற்காக அல்லாமல் கல்வி அறிவாலும் பக்தி விசுவாசத்தாலும் சிறந்தவர்களைக்கொண்ட ஒரு வகுப்பாருக்கு இடத்தைக்கொடுத்துவிட்டு இந்தப் புரோகித ஜாதியானது நாளடைவில்மறைந்துவிடுமென்று நான் நம்புகிறேன்.

இந்நாளில் நமது சமூகத்தை எதிர்த்துநிற்கிற அனேக சமூக சீர்திருத்தங்களில் நமது கவனிப்பை உடனே வேண்டுகிற சிலவற்றைப்பற்றிநான் குறிப்பிடுகிறேன். அவைகள் தீண்டாமை யொழித்தல், கோயிலுட்புகுதல், இளமைத்திருமணம், கடைசியாக முக்கியமானதாயுள்ள சீர்கொடுத்தல் முதலியனவாம். அவைகள் இந்நாளில் வந்த புதிய கெடுதிகள் அல்ல அவைகள் நூற்றுண்டுகளாக இருக்கின்றன. இந்தக் கெடுதிகளுக்கு விரோதமாய்ச் சண்டை போட்டுக் கொண்டிருப்பதாக எல்லாக் கட்சிக்காரர்களும் உரிமை கூறுகிறார்கள். தீண்டாமையானது நமது நாகரீகத்திற்கு ஒரு குறையாயிருக்கிறது. நமது தேசிய முன்னேற்றத்திற்கும் அது ஒரு பெருந்தடையாயிருக்கிறது. உயர்ந்த சாதியாருக்குச் சரியாகத்தீண்டாதார் என்போரும் உயர்ந்தேறி வரும்படி கல்வியும் நல உரிமைகளும் தீண்டாதார்க்குக் கொடுக்கப் படவேண்டும்.

## கோவிலுட் புகுதல்.

கோவிலுக்குள் மூலஸ்தானம் தவிர மற்ற எல்லா இடங்களிலும் இந்து மதத்தை நம்பாதவர்களும் அதற்கு எதிரிடையாயுள்ளவர்களும் சுற்றித்திரிய இடங்கொடுத்துவிட்டு இந்து மதத்தைக் கொண்டாடுவதோடு அல்லாமல் இந்து மதத்தில் பிறந்து அதையே நம்பி அதிலேயே இருந்து அதற்காகவே இறந்து கொண்டு இருக்கிற இந்து மக்கள் கோவிலுக்குள் நுழையக்கூடாது என்பது பொல்லாத தலைவிதியாயிருக்கிறது. என்னுடைய அபிப்பிராயத்தில் இது தீண்டாமையை விடக் கேவலமானதாயிருக்கிறது.

இந்து சமூகமானது இந்த அநியாயத்தை நிவர்த்தி செய்யாமல் எவ்வளவு காலம் வரை விட்டுக்கொண்டிருக்கிறதோ அவ்வளவு காலம் வரையில் ஏதாவது ஒன்று அல்லது மற்றொரு அந்நிய ஆதிக்கத்திற்கு உள்பட்டே இருக்கும்.

## இளமைத்திருமணம்:—

குழந்தைப்பருவத் திருமணமானது ஓர்வகை இளமைத்திருமணமாகும். அது அநேகமாய்ப் பார்ப்பனருக்குள் பரவி நிற்கிறது. மற்றொரு வகை அதாவது பத்துப் பதினொரு வயதுள்ள வாலைப்பருவப் பெண்களைத் திருப்பூட்டுதல் செய்து கொடுக்கப்படுவது. இரண்டு வகைகளும் ஒன்று போலக் கெட்டவைகள் தான். சட்டத்தைக் கொண்டு இளமைத்திருமணத்தை ஒழிக்க முயற்சி செய்யப்படுகிறது. அதாவது பையன்களுக்கும் பெண்களுக்கும் திருமண வயதைவரையறுத்துக்குறிப்பிட்டு விடுவதாகும். இது மதக் கோட்பாடுகளுக்கு விரோதமானது என்பதின் பேரில் இவ்வழியிலுள்ள எவ்விதமான சீர்திருத்தங்களுக்கும் விரோதமாக பிடிவாதக் கொள்கையுடையவர்கள் இருக்கிறார்கள். என்பதைச்சொல்லத்தேவையில்லை. இளமைத் திருமணத்தின் பெரிய கெடுதி என்பது சிறிய பெண்கள் தங்கள் பொருப்பாளித் தன்மையைத் தெரிந்து கொள்ள முடியாத பருவத்திலும் அவர்கள் விளையாடித்திரிய வேண்டிய காலத்திலும் பிள்ளைகளுக்குத் தயாகிவிடுகிறார்கள் என்பதுதான்.

அக்குழந்தைகள் அநேகமாய்ப் போதுமான தேகவலிமை இல்லாமல் நலங்களில்லாத அசட்டையான தேச மக்களாய் விடுகிறார்கள். மக்கள் சமூகம் கொஞ்சம் கொஞ்சமாகக் கெட்டு அருகி வருகிறது. இதைத் தடுப்பதற்கு ஏதாவது செய்யாவிட்டால் காரியங்கள் இன்னும் கெட்டுப் போகும். ஒரே அடியில் சமூகத்திலிருக்கிற எல்லாக் கெடுதிகளையும் திருத்திவிட முடியாது

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.)

---

தை எதிர் நோக்கி நிற்கும்." என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இதுகாறுங் கூறியவாற்றால், எல்லா மக்களும் தீய செயல்களைச் செய்வதை விடுத்து, நல்ல செயல்களைச் செய்யவேண்டும் என்பதும், தீய செயல்களிற் செல்லாமலிருப்பதற்குத்தான் அடக்கம் என்று சொல்லப்படுமென்றும், ஒன்றுஞ்செய்யாமல் வாளாவிருப்பது அடக்கமாகாதென்பதும் கூறப்பட்டன, இவையே திருவள்ளுவர் கொள்கையெனவும் அறிகின்றோம்.

## அறங்களிற் சிறந்தது எது?

இதுகாறும் நம் தமிழர்கள் பல்வேறு அறங்களைச் செய்து வந்திருக்கின்றார்கள். லட்சக்கணக்கான பொருள் செலவிட்டுக் கோயில்களை எழுப்பி அவற்றிற்கு கும்பாபிஷேகம் நடாத்தி வருகின்றார்கள். வேடிக்கை பார்க்கவும் தீயசெயல்களைப் புரியவுமே மக்கள் கோயில்களுக்குப் போகின்றார்களே யல்லாமல் அன்பு செலுத்தும் வகையில் போவதில்லை. கோயிற் குருக்களும் அன்பு முறையில் வழிபாடு ஆற்றுகிறாரில்லை. ஆனால் கோயில்களுக்குள் எத்தனையோ தீயசெயல்களை யெல்லாம் புரிகின்றார்கள். எல்லா வகையிலும் கோயில்களினால் மக்கள் எய்தும் நன்மையைவிட தீமையே மிகுதியாகக் காணப்படுகின்றது. ஆகலான் அன்பர்களே, இக்காலத்திலே கோயில்களை எழுப்புவதை விட்டொழித்தல் நலம்.

சத்திரம், சாவடி முதலியவற்றைக் கட்டுவித்து ஒரு வகுப்பாருக்கே உணவு அளித்து வருகின்றார்கள். பசி மக்களெல்லார்க்கும் பொது என்ற சிறப்புணர்ச்சியினால் பசித்தவர் எச்சாதியினராயிருப்பினும் அவர்கட்கெல்லாம் உணவளிப்பதே சிறந்த கடைமையாகும். இப்போது எத்தனையோ சத்திரம் சாவடிகள் இருக்கின்றன. மேலும் இக்காலத்தில் எளிதாகவும் விரைவாகவும் போக்குவரவு செய்யப் புகைவண்டி, மோட்டார் முதலிய வசதிகள் மிகுதியாயிருப்பதால் சத்திரம் சாவடிகள் புதிதாக எழுப்பவேண்டியதில்லை.

நமது மக்கள் மடங்களுக்கு மிகுதியான பொருள்களைக் கொடுத்து அவற்றைக் கொலைக்களமாக்கிவிட்டார்கள். மடத்தலைவர்களும் ஒழுக்கம் பேணல், தமிழ்வளர்த்தல் என்னும் அறச்செயல்களை ஒழித்து வழக்குக்கும் வீண் ஆரவாரங்களுக்கும் பெரும்பொருளைச் செலவிடும் பேருழைப்பில் அழுந்திக்கிடக்கிறார்கள்

நம் தமிழ் மக்கள் நம் தாய்மொழியாய தமிழ் மொழியில்லாத ஆரிய வேதங்களுக்கு பெரும் பொருள் செலவழித்துப் பாடசாலைகள் அமைத்திருக்கின்றார்கள். அவற்றால் பார்ப்பனர்கள் வயிறு புடைக்கத் தின்று தம்மவர் வாழ்க்கைக்கு வழி தேடிக் கொள்கிறார்களே யல்லாமல் பிறிதுயாது நன்மையுமில்லை. இந்திரன், மித்திரன், வருணன் முதலிய பல தெய்வ வழிபாடும், ஆடு, மாடு, குதிரை, மக்கள் முதலியோரைக் கொன்று, சோமபூண்டின் சாறுகிய கள்ளை அருந்தி வெறியாட்டு வேள்வி வேட்டலும், ஆரிய மக்களும் அவர்களாற் றெய்வமாகப் பாராட்டப்பட்டோரும் செய்த காமப் புன்செயல்களும் மலிந்து கிடக்கின்ற ஆரிய வேதங்களுக்குப் பாடசாலைகள் அமைப்பதை யொழித்து அன்பொழுக்கமும், அருளொழுக்கமும் வளர்க்கும் பாடசாலைகள் அமைப்பார்களாயின் அதுவே நம் தமிழ் மக்கள் தாம் படைத்த செல்வத்தாற் பெற்ற பயனாகும்.

மோட்டினரைப்போல, கல்விக்கழகத்திற்கும் தமிழ் வாசகசாலைக்கும், தமிழ் நூல்களில் முதன்மையான நூல்களை மிகுதியாக அச்சிட்டு இனாமாகவும், மிகக் குறைந்த விலையாகவும் ஏழை மக்களுக்கு வழங்குவதற்கும் நம் மக்கள் பொருள் செலவிடுவதைக் காணோம்; இத்துறைகளில் கருத்து வைக்காத வரையில் நாம் ஏனையோர்க்கு அடிமைதான். கல்வியில் மேம்பாடுடையவரே ஆளுதற்குரியராகவும், அதிற் குறைபாடுடையவர் ஆளப்படுபவராகவும் அமைவது யாவரும் அறிந்ததே

இவ்விருபதாம் நூற்றாண்டில் ஏனைத்துறைகளிற் செலவிடுவதை ஒழித்துக் கல்வித்துறைக்குத் தங்கள் தங்களாலியன்றவளவு பொருளுதவி செய்வதே எல்லா அறங்களினுஞ் சிறந்ததாகக் கொள்ளப்படும்

செ. செ. சேதரம்

## தேவ தாசிகளுக்கோர் வேண்டுகோள்.

### நமது நோக்கம்.

சகோதரிகளே!

நம் சமூக முன்னேற்றத்திற்காகவும், நும் முன்னேற்பட்ட இழிச்சொல்லாகிய மாசைத்துடைக்கவும், ஸ்ரீமதி டாக்டர் முத்துலெட்சுமியம்மாள் எப்பாடுபடுகிறார்களென்பதை நோக்கின் மேற்படியாருடன் ஒத்துழைக்க முன் வந்திருக்கும் சில சகோதர சகோதரிகளும் இன்னெருக்கடியான சமயத்தில் காலம் தாழ்த்தாது மென்மேலும் நம் சமூகம் முன்னேறும் வழியைக் கடைப்பிடித்தொழுக ஈசன் அருள் புரிவாராக

எனதருமைச் சகோதரிகளே! உங்கள் குலத்தில் செல்வர் முதல் ஏழைவரை அவரவர் அந்தஸ்திற்கேற்றவாறு விலையேறப்பெற்ற கழுத்தணிகளோடு, விலை குறைந்ததும், கனம், இடை இல்லாததும், சொற்ப அகலநீளமுடையதும், வட்டவடிவமானதுமான ஒரு சிறு அணியை, நீங்கள் நன்மை தீமை இன்னதென் றறியாத சிறுமிகளாயிருக்கும் பொழுதே அடவழக்கத்தில் கட்டுப்பட்ட உங்கள் பெரியோர்கள் பலர்பேரறிய பெருமையாய்ப் பிணித்து விடுகிறார்கள். நீங்களும் மேற்படி அணியில் பொல்லாச்சூழ்ந்திருப்பதை அறியமாட்டாமல் வெகு சந்தோஷத்துடன் அணிந்துகொண்டு பின்னால் அவதிப்படுகிறீர்கள் என்பது நீங்கள் அறியாத விஷயமல்ல.

அந்தோ! மேற்படி பாழான அணியின் பெயரை எழுதவும் கை கூசுகின்றது, சொல்லவும் நாத்தழுதழுத்துத் தொண்டையை அடைக்கிறது; மனத்திடை நினைத்தாலோ நெஞ்சம் பகீரெனத் திடுக்குறுகின்றது. இருந்தாலும் ஈழை காணும் எனது நோக்கத்திற்கு ஆதரவளித்து உங்கள்குலம் முன்னேற்றமடைந்து இழிச்சொல்லை மாற்றிப் பிறமக்களைப்போல் சுயமதிப்புடன் இருப்பீர்களென்ற ஆவல் மேலாடுகிறதினால் நான் துணிந்து அவ்வணியின் பெயரைக் கூறுகின்றேன்.

“அறியாச் சிறுமிகளை அல்லற்படுத்துவதும், உங்களைப் பழிமோசக் குழியில் அமிழ்த்துவதும், உங்களைத் தாசியென்றும், வேசியென்றும் வசைமொழிகளைச் சொல்லச்செய்வதும், நாங்கள் பெண்பிள்ளைகளென்று சொல்லிக்கொண்டால், இல்லை, இல்லை, தாசிகள், வேசிகள், என்று புனைப்பெயர் இழிவாய்க் கொடுப்பதும், உங்கள் சமூகம் முன்னேறும் வழிக்கு முட்டுக்கட்டை போடுவதும் எது? அதுதான் அக்கேடுகெட்ட “பொட்டு” என்பது. இப்பொட்டுத்தான், உங்கள் குலத்திற்குச் சாபம்.

இப்பொட்டின் மகிமைதான் என்னே! அதன் கூற்றுத்தான் என்னே! அதன் கொடுமைதான் என்னே! அதனால் உங்கள் சிறுமிகள் அழிந்தோரெத்தனை! உயிர் துறந்தோ ரெத்தனை! நோய்வாய்ப்பட்டு அலறித்தவிப்போ ரெத்தனை! ஐயோ! அதை நீங்கள் கழுத்திலணிந்திருப்பதா லல்லவா பல கேடுகளுக்கும் ஆளாகி சுயமரியாதையையும் இழக்கின்றீர்கள். அற்ப விலையுள்ள பொட்டு உங்கள் சுத்தமான இருதயத்தின்மேல் இருந்துகொண்டு உங்களையும் உங்கள் குலத்தையும் ஈடேறவிடாது கெடுக்கும் இக்காட்டுப்பொட்டை சுட்டுச்சாம்பலாக்கி ஓடும் நீரில் கரைத்துவிடுதல் அவசியமும், அவசரமுமாகும். உங்களுக்கு அவுசாரியென்றும், விபசாரியென்றும்பட்டமளித்த அப்பாழான பொட்டை ஆற்றிலெறியுங்கள் உங்களுக்கு அவமரியாதையை உண்டுபண்ணிய ஆசிரியர் தரித்த ஆபாசமான பொட்டை உங்கள் கழுத்தை விட்டு நீக்கி மண்ணில் புதைத்து விட்டு, உங்கள் நுண்ணறிவின் நீரால் உங்கள் இருத

## கிருஷ்ணகிரி யூனியன் போர்டு தலைவரின் தேர்தல்.

இம்மாதம் முதல் தேதி நடந்த கிருஷ்ணகிரி யூனியன் போர்டு மீட்டிங்கில் தவுல்தாபாத் திரு. ஜி. அனுமந்து நாயுடுகாரை ஷை போர்டுக்கு தலைவராக ரிசால்டார் எம். வெங்கோஜி ராவ் பவார் அவர்கள் பிரேரேபிக்க திரு. வி. கிருஷ்ணசாமி நாயுடுகார் ஆதரிக்க போட்டியின்றி ஏகமனதாய் தெரிந்தெடுத்தார்கள்.

திரு. நாயுடுகார் இரண்டாம் முறையாக ஷை போர்டுக்கு பிரசிடெண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டது அத்தாலூகா வாசிகளுக்கு பெரிதும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கின்றது.

ஒருநிருபர்.

---

யத்தைக்கழுவி, கண்ணிய மென்னும் வஸ்திரத்தால் துடைத்து புண்ணிய மீட்டிப் புனிதவதியாக்கும் பொன்னாபரணமாகிய “திருமங்கலியத்தை” அல்லது தாலியை சுயமரியாதை உணர்ச்சியுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் அணிந்து கொண்டால் பண்ணிய பாவமும் இழிச் சொல்லும் பழிச்சொல்லும் அவமதிப்பும் போய் சுயமதிப்புடன் கொஞ்சத்திற்கு கொஞ்சமாகிலும் எஞ்சிய காலத்திற்காவது வாழ்வீர்கள். இந்த எனது நோக்கத்திற்கு ஆதரவளிப்பதோடு அவரவர்களே ஐந்து நிமிஷ நேரமாகிலும் ஆராய்ந்து பார்த்தால் உண்மை தெள்ளெனத் தெரிவதோடு பண்டையகால மூட வழக்கங்களும், பார்ப்பனரின் சூழ்ச்சியும் நன்கு தெரியும்.

இல்லாவிடில் சுயமரியாதை யுள்ள சகோதரிகளே! கீழ் வரைந்திருப்பதையாவது நோக்குங்கள். உங்களுக்கு ஓர் தங்கையோ மகளோ இருந்து அப்பெண்களை உங்கள் குலத்தில் மணஞ்செய்து கொடுத்தால் அப்பெண்களுக்கு எவ்வளவு பெருமையென்றும் நீங்களே அவர்களை எவ்வளவு கண்ணியப்படுத்துகின்றீர்களென்பதையும் மேற்படி மணமுடித்த பெண்கள் உங்களை இழிவாகப் பேசுகிறதையும், உங்களோடு சமமாய் இருக்கின்றார்களா வென்பதையும், உங்கள் ஆண் சகோதரர்கள் உங்களை எவ்வளவோ இழிவாகப்பேசுவதையும் அவரவர் மனைவிமக்களோடு உங்களைச் சமதையாய் வைக்காமல் உங்களை வேற்றுமைப்படுத்துவதையும் நீங்கள் பெற்ற பிள்ளை உத்தியோகஸ்தனாயும் ஖்யாதி பெற்ற சங்கீத வித்வானாயும் இருந்தாலும் அவனை “வேசிமகனே” யென்று பிறர் செல்வதையும் உங்கள் பிள்ளைகளுக்கு இரத்தம் கொதித்தும் வாய்திறக்க முடியாமல் இருப்பதையும் பார்த்தும் கேட்டும் இருப்பீர்கள். இவ்வளவு அவமதிப்பையும் தேடிவைத்தது அப்பாழான பொட்டும் அதனால் ஏற்பட்ட விபசார தோஷமும் அல்லவா? ஆகையால் பட்டவர்க்கே தெரியும் பொட்டின் அருமை. ஆகையால் உங்களில் பட்டவர்களாவது அப்பாழான பொட்டை அறுத்தெறிவதோடு உங்கள் மக்களுக்கும் அதை ஓட்டவைக்காமல் ஆற்றில்ஓடும் நீரில் எறியுங்கள்

சுருங்கக் கூறின் இசை வேளாள மக்கள் ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கின்ற சங்கங்களிலும் சங்கங்கள் இல்லாத இடங்களிலும் தனிக்கூட்டமிட்டு பேரறிவாள பெரியாராகிய சகோதர சகோதரிகளுடன் கலந்தாலோசி எனது நோக்கம் சரியா அல்லவா வென்பதையும் சரியாயிருந்தால் என் சிற்றறிவின் நோக்கத்திற்கு ஆதரவளித்து அருமை ‘திராவிடன்’ ‘குடிஅரசு’ வாயிலாகவே தங்களின் அன்பை வெளியிட வேண்டியாய் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். சுபம்,

தி, சு, மாசிலாமணிப்பிள்ளை,

# உண்மை விளக்கம்

## எதிர்ப்புகள்.

ஸ்ரீ நாசாமியார் எழுதுவது.

சென்ற இரண்டு மூன்று வருடங்களாக வெளிவந்துலவும், "குடி அரசின்" பிரசாரத்தால், தமிழ் நாட்டில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிருக்கிறது. அதன் பயனாக தமிழ் மக்கள் சற்று கண் விழித்திருக்கின்றார்கள் என்று சொல்வது மிகையாகாது. ஆயிரக்கணக்கான வருடங்களாக, மதத்தின் பெயரால் சின்னப்பட்டு சிதறுண்டு ஒருகூட்டத்தார்களுக்கு அடிமைப்பட்டு, அவர்களின் மதப்புரட்டுகளிருந்து விடுதலையடைய முடியாமல் அடிமைப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் தமிழர்களை தட்டி எழுப்பி கண் விழிக்கச்செய்து, அபய மளித்த "குடி அரசுக்கும்" அதன் ஆசிரியாவர்களுக்கும் தமிழுலகம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றது. ஆனால் உலக நன்மையைக் கருதி உழைப்பவர்களுக்கு பற்பல எதிர்ப்புகள் உண்டாவது சகஜந்தான். உதாரணமாக, பகவான் புத்தர், யேசுகிருஸ்து, மொஹமத்நபி, முதலான தீர்க்க தரிசிகளுக்கும், அவர்கள் காலங்களில் உண்டான எதிர்ப்புகளும், கஷ்டங்களும், அளவிட முடியாதென்று சரித்திரங்களால் அறியக்கிடக்கின்றன.

அதுபோல் தற்பொழுது 'குடி அரசுக்கும்' எதிர்ப்புகள் ஏற்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. "அஞ்ஞானேனாவ்ரதம் ஞானம்" என்ற மொழிக்கிணங்க, உண்மை ஞானத்தை அஞ்ஞானம் மூடிக் கொண்டிருக்கும் காலபரியந்தம் எதிர்ப்புகள் நிகழ்ந்தே தீரும். பகுத்தறிவில்லாத குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் தங்கள் எதிரில் காணும் பாஷாணம், சுண்ணாம்பு, முதலான எந்த வஸ்துக்களாயினும் சரி, கையிலெடுத்து உடனே வாயில் போட்டுவிடுகின்றன. வயது வந்தவர்கள் அதைதடுத்து பாஷாணத்தை கையிலிருந்து விடுவிக்க முயலும்பொழுது குழந்தைகள் அழ ஆரம்பிக்கின்றன. பாஷாணத்தை உண்டால் பிராணனுக்கு அபாயம் வரும், சுண்ணாம்பைத்தின்றால் வாய்வெந்துவிடும், என்ற அறிவிருந்தால் அழுவதற்கு நியாயமில்லை. குழந்தை அழுகின்றதே என்று கருதி கையிலிருக்கும் பாஷாணத்தை அப்புறப்படுத்தாமல் விட்டுவிடுவதும் அதனால் நேரும் அபாயங்களைப்பார்த்துக்கொண்டிருப்பதும் வயது வந்தவர்களுக்கு அழகாகுமா? அதைப்போல், ஆலோசனையின்றி தொன்றுதொட்டு கண்மூடித்தனமாக பழகிவந்த மூட விஸ்வாஸங்களில் மூழ்கிக் கிடப்பதால், உண்மையை உணரும் சக்தியின்றி 'மதம் போச்சு, கடவுள் போச்சு, நாஸ்திகமாச்சு' என்று சொல்லிக்கொண்டு உண்மையை உரைப்பவர்களை எதிர்க்க கங்கணம் கட்டிக்கொள்வது ஜன சமுதாயத்தின் துர்ப்பாக்கியமென்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. நிற்க,

### மதம்

என்றால் கொள்கை யென்று பொருள். மக்களுள் உயர்வு தாழ்வின்றி, சமத்துவம் சகோதரத்துவம், சம உரிமை, அன்பு, பரோபகாரம் முதலான உத்தம குணங்களை கற்பித்து வாழ்க்கையை புனிதமாக்கி சுக ஜீவிகளாய் வாழச்செய்யும் கொள்கைகளை யுடைய மதங்கள்தான் வேண்டற்பாலன. மக்களுள் உயர்வு, தாழ்வுகளை கற்பித்து பிர்மாவின் முகத்திலும், நாவிலும் வந்தவர்களென்றும் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்களென்றும், மற்றையோர் அவர்களுக்கு அடிமைகளென்றும் பேதப்படுத்தி எண்ணிறந்த ஜாதிப்பிரிவுகளை சிருஷ்டித்து அதற்கு சான்றாக மனு அதர்ம சாஸ்திரங்களையும் ஏற்படுத்தி ஒற்றுமையை கெடுத்து பேத திருஷ்டியை விர்த்தி செய்யும் மதங்களை வேண்டாமென்று "குடி அரசு" சொன்னால், பார்ப்பனர்கள் சும்மாவிருக்க நம்மவர்கள் சிலர் மதம் போச்சு என்று சொல்லுவார்களானால், நம் அறிவை கடவுள்தான் மெச்சவேண்டும். மதத்தின் பேரால் அநுபவித்து வந்த, வருகின்ற துன்பங்களும், கஷ்ட நஷ்டங்களும், போதாதென்று கருதி வர்ணாசிரம அதர்மங்கள் என்றென்றும் நம் நாட்டில் இருக்கவேண்டுமென்று இவர்கள் பிரயத்தினப்படுவார்கள் என்றால் இதை யாரிடம் முறையிடுவது? மதம் போய்விடுமென்று கூறும் நம்மவர்களுக்கு மதத்தில் என்ன உரிமை இருக்கின்றதென்பதை நாம் யோசித்துப்பார்க்கின்றோமா? மதத்திற்காக என்னதான் பரிந்து பேசினாலும் நாம் சூத்திரர்கள், சூத்திரர்தான் என்பதை வெள்ளைக்காரச் சட்டத்திலும் பதிவு செய்தாய்விட்டது. சூத்திரர்களுக்கு மத விஷயங்களில் எவ்வித உரிமையும் இல்லையென்று பார்ப்பன மதம் கூறுகின்றது.

> 'ஜபஸ்தபத்தீர்த்தயாத்ரா, ப்ரவ்ராஜ்யா
> மந்த்ர சாதனம்
> தேவதாராதனம் சைவ, ஸ்திரீ சூத்திர
> பதனானிஷட்'

என்று அத்ரிசம்ஹிதையில் கூறப்பட்டிருக்கிறது.

கருத்து 'ஜபம், தவம், தீர்த்தயாத்திரை, மந்திரம் ஜெபித்தல், சித்தியடைதல், கடவுளை ஆராதித்தல், (வணங்குதல்) முதலான கர்மங்களை, சூத்திரர்களும், பெண் மக்களும் செய்தல் கூடாது. செய்தால் அவர்கள் அதோகதி (நாசம்) ஆவார்கள்' என்பதே

> 'சூதராதிஷ்பர் சனெள்நாணம், கார்யம்
> சுத்திமபீப்ஸதா,
> அத்ய ஜானும் சர்கிர்லெஷ, சாபீமார்ஜன
> மாசரேத்'

என்று சங்கரர் கூறுகின்றார்.

கருத்து 'பிராமணர்கள் சூத்திரர்களை தொடக்கூடாது; தொட்டால் ஸ்நாநஞ்செய்யவேண்டும், மற்றும் தாழ்ந்த ஜாதியார்களை சமீபத்தில் வர விடக்கூடாது வந்தால் பெருந் தீட்டாய்விடும், ஆகையால் பரிசுத்தத்தைக்கோரும் பிராமணர்கள் அவர்களை தொடவோ நெருங்கவோ கூடாது' என்பதாம்.

நேயர்களே மேற்கூறிய சுலோகங்களின் கருத்தை கெவனியுங்கள். 'மதம் மோட்சத்திற்கு வழி காட்டியாயிருப்பதால் மதத்தை திருத்தக்கூடாது' என்று கூறுகின்றீர்கள். மோட்சமென்றால் விடுதலை என்றுபொருள். அதாவது, துக்கத்திலிருந்து விடுதலை அடைவதாம். மோட்சமடைவதற்கு, மனம் பரிசுத்தமடைவதற்காகவேண்டிய மந்திரம் செபிக்கவோ, தவம் செய்யவோ, கடவுளைப் பூசிக்கவோ, ஆகிய காரியங்களை, நீங்கள் செய்யக்கூடாதென்றும், செய்தால் நாசமடைவீர்களென்றும், இப்போது போய்விடுமே என்று நீங்கள் பயப்படும் மதங்கள் கூறுகின்றன. கடவுளை ஆராதிக்க உரிமையற்ற நீங்கள் எவ்வண்ணம் மோட்சத்தை அடையமுடியும்? சூத்திரனைத் தொட்டால் குளிக்கவேண்டுமென்று சங்கர மதம் சொல்லுகிறது. "மதம் போச்சு" என்று நீங்கள் சொல்லும் மதத்தில், மனிதனைப்போல் உங்களை ஒரு மனிதனாக கருதப்பட்டிருக்கின்றதா? 'பார்ப்பனர்களுக்குபணிவிடை செய்வதுதான்சூத்திரனுக்கு மோட்சசாதனம்' என்று மதத்தில் கூறியிருப்பதால், ஐயார்களுக்கு பணிவிடை செய்வதைத்தவிர, மதத்தில் உங்களுக்கு எவ்வித உரிமையும் நல்கப்படவில்லை என்பது வெளிப்படையல்லவா? இவ்வண்ணம் மதவிஷயங்களில் எவ்வித சுதந்திரமுமில்லாத நீங்கள் "மதம் போச்சு" என்று சொல்வதில் ஏதாவது அர்த்தம் இருக்கின்றதா என்பதை நீங்களே யோசித்து முடிவுசெய்யுங்கள். கடவுளை ஆராதிக்க உரிமையற்ற நீங்கள்-கோவிலுக்குள் நுழைய உரிமையற்ற நீங்கள்-கோவில்களைக் கட்டுவதில் ஏன் லட்சக்கணக்கான திரவியத்தை நாசம் செய்கின்றீர்கள்? தீர்த்தயாத்திரைக்கு உரிமையற்ற நீங்கள் காசி, ராமேசுரம் முதலான ஸ்தலங்களுக்கு சென்று தீர்த்தமாடுவதில் கணக்கில்லாத பணத்தை வீணாகச் செலவு செய்கின்றீர்கள்? இத்தகைய காரியங்களை சூத்திரர்கள் செய்தால் அதபத்னம் ஆவார்கள் என்றல்லவா உங்கள் மதத்தில் கூறியிருக்கிறது? கணக்கில்லாத திரவியத்தைச்செலவு செய்து நாசத்தை தேடிக்கொள்வீர்களானால் இதைவிட மோசமான காரியம் வேறுயாதாவது உண்டா? என்பதை யோசித்துப்பாருங்கள்.

### வேதம்.

என்றால் அறிவு. "வேத்யதேவேத" அறிவதுதான் வேதம். ஒவ்வொரு மதத்திலும் அறிவை விர்த்தி செய்யவேண்டிய வேத புத்தகங்களை எழுதி, அதை யெல்லோரும் படிக்க உரிமையளிக்கப்பட்டிருக்கிறது. நம் மதத்திலோ, பார்ப்பனர்களைத் தவிர சூத்திரர்கள் வேதத்தைப் பார்க்கக்கூடாது. பார்த்தால் கண்ணைக் குத்துவதும், கேட்டால் காதில் ஈசத்தை காய்ச்சி வார்ப்பதும், படித்தால் நாக்கை அறுப்பதுமான தீபத்தனைகள், ஏற்பட்டிருக்கின்றன. இந்நிலையில் நீங்கள் அறிவை விர்த்தி செய்வதெப்படி? வெள்ளைக்காரர்களின் உதவியால் இப்பொழுது வேதத்தில் உள்ள புரட்டுகளையாவது பார்க்க உரிமை பெற்றிருக்கின்றோம். வேதத்தைப்பார்க்கவும் கேட்கவும் மத சம்மதம் பெறாத நீங்கள் "வேதம் போச்சு" என்று சொல்வீர்களானால் இதைவிடவெட்கமான

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

அகில மலாய

## சுயமரியாதைச் சங்கம்.

இப்புவியின்கண் உள்ள உயிர்கட்கெல்லாம் இம்மைக்கும் மறுமைக்கு முரிய மேன்மையான நிலையை அடைய வேண்டுமென்ற விருப்பம் இயற்கையிலேயே அமைந்துள்ளதேயாயினும், நம் மதக் கோட்பாடுகளும், சுயநலங்கருதி மதத் தலைவரென மதித்துக்கொள்ளும் மதம் பிடித்த மந்த புத்தியையுடைய மகா பாதகப் பார்ப்பனர்களும், நம் சுதந்திரங்கள் எல்லாவற்றையுஞ் சுருக்கி வைத்திருப்பது அறிவாளிகளனைவருமறிந்த விஷயமே. விஷத்தினு மிகக்கொடிய இப் பாதகப் பார்ப்பனர், பார்ப்பன ரல்லாதார்களை பல வழிகளிலும் மதத்தின் பெயரால் ஏமாற்றி தயவு, தாட்சண்யம், ஈவு, இரக்கமற்று தட்டி பொருள் பறிப்பதுடன் நம் சமுதாயம், கல்வி, ஒழுக்கம், அரசியல் முதலிய துறைகளிலும் புகுந்து தற்புகழ்ச்சியையும் ஜாதிகர்வத்தையும் கையாண்டு, கடவுளுக்கு சமத்துவமாய் சகலத்தையும் படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய முத்தொழில்களிலும் முதன்மையான கடாட்சம் பெற்றவரெனக் கர்ச்சிக்கின்றனர்.

“தமிழ்நேசன்” என்னும் பார்ப்பனப் பத்திரிகை, நாட்டிற் தமிழ்ப் பாஷை உற்பத்தியாகி உயர்வடைவதும் தமிழ் மக்களனைவருந் தழைத்தோங்கி வருவதுந் தன்னாலேயன்றி வேறு எவ்வழியாலு மல்லவென்றும், ஆங்கில அரசாங்கமே தன் அன்பு வேண்டி நில்லாவிடின் இந்நாட்டை ஆளுகை செய்ய முடியாதென்றும், ஆர்ப்பாட்டம் போடுகின்றது. கௌரவ ஸ்ரீ வீரசாமி அவர்கள் மலாய் நாட்டு சட்டசபை அங்கத்தினர் ஸ்தானம் வகித்தது தனது (நேசனின்) விடா முயற்சியாலென்றும், கன்னி மேயோ வென்னும் அமெரிக்க மாது வெளியிட்ட “இந்திய—மாதா” வென்னும் புஸ்தகத்தி லடங்கியுள்ள ஊழல்களைக் களைந்து அயல்நாடுகளையும் அமெரிக்க மாதையும் கண்டிக்க முன் வந்தது தானேயன்றி வேறெவரும் வெளிவரவில்லை என்றும், “தமிழ்நாடு” பத்திரிகாலயத்தினின்று வேறு பத்திரிகைகள் புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதும் வழக்கம் போன்று மேற்படி பத்திரிகையின் ஆசிரியர் இம்மலாய்நாட்டி லிருக்கும் பொழுது யாரோ உதவி ஆசிரியர்கள் அறியாமையினால் வெளியிட்ட மதிப்புரை ஒன்றையும் 6-4-28ல் தெலுக்கான்சனிலிருந்து யாரோ எழுதியதென்று இதற்கென்றே தயாரிக்கப்பட்ட கடிதமொன்றையும் பிரசுரஞ் செய்து ஏகமாய்த் தன்னைப் புகழ்கின்றது.

கௌரவ ஸ்ரீ வீரசாமி யவர்கள் “தமிழ்நேசன்” பத்திரிகையின் விடாமுயற்சியினாலேயே சட்டசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டாராயின் இந் நேசனின் ஆலோசனைகளைக் கைக்கொண்டே இந்தியாவும் இம்மலாய் நாடும் ஆளப்படுகின்றதென்றே கொள்ள வேண்டியிருக்கின்றது. இது சரியாயின் சட்ட சபைகளும் மற்ற ஏற்பாடுகளும் ஆங்கில அரசின் அறிவீனத்தினாலேயே அமைக்கப் பட்டிருக்கின்றதென உணரற்பாலது. அரசாங்க ஆளுகைக்குள் அடங்கி பார்ப்பன ரல்லாதார்களால் வளர்க்கப்பட்டுவரும் இத் “தமிழ் நேசன்” இப்படியான இழிமுறையில் வயிறு வளர்க்காது ஏகசக்கிராதிபதி ஸ்தானத்தை வகித்து தன் ஆளுகைக்குள் ஏனையோரை அடக்கி வைத்திருக்கலாமே. நிற்க,

கன்னி மேயோ எழுதி வெளியிட்ட விஷயங்களனைத்தும் பார்ப்பனரிடமே பரம்பரையாயுள்ள பாழுங் கெட்ட பழக்க வழக்கங்களேயன்றி பார்ப்பனரல்லாதாரிடத் தமைந்தவைகளல்ல. அன்றியும் அம்மாது உலகெங்கும் புகழ்பெறும் நம் நாட்டை இம்மாதிரி இழிவாய் வரைந்து வெளியிட வேண்டிய விபரங்களனைத்தையும் அறியப்படுத்தி வைத்ததும் இப்பார்ப்பனர் தாமே. உத்தியோக முறையில் உயரிய பதவிகளை அடைவதற்கு அவாக்கொண்டு பலவிதமான இழிதொழில்களைப் பரப்பியும், மற்றும் சுயநலன்களை யடைவதற்கு நம்மவர்களின் சுதந்திரங்களனைத்தையும் கெடுத்து நம் குடும்ப விஷயங்கள் கொள்கைகள் முதலிய யாவற்றையும் அயல்நாட்டவர்களுக்கு அறிக்கையிட்டும், நம்மையும் நம் நாட்டையும் அடிமைப்படுத்தி வைத்திருப்பது இப்பாழும் பார்ப்பனரல்லாது வேறுயார்?

வயிற்று வளர்ப்புக்கென்றே தயாரிக்கப்பட்ட “மனு அதர்மசாஸ்திரத்தை” மேலான “மனுதர்ம சாஸ்திர” மென்றும் அதைக் கண்டவர், கேட்டவரனைவருந் தங்களைத் தான் வணங்க வேண்டுமென்றும், அப்படிச் செய்யாத அறிவிற்சிறந்த பெரியோர்களை அவமதித்தெழுதியும், இப் “பார்ப்பன நேசன்” அகங்காரம் கொள்கின்றது. சுயமரியாதை முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் “குடி அரசு” “திராவிடன்” ஒழுக்கம், கல்வி முதலிய விஷயங்களிற் கஷ்டப்படும் “நவசக்தி” “லோகோபகாரி” முதலிய பத்திரிகைகளையும், பொதுஜன ஊழியத்தி லீடுபட்டிருக்கும் பெரியோர்களையும் “மலாய் நாட்டின் துவேஷப் பிரசாரக் கொடுமை” என்ற தலையங்கத்தின்கீழ் எல்லோரையும் ஏகமாய் வசை வெளியிட்டு தற்புகழ்ச்சிசெய்யும் “நேசனின்” போக்கியதையை என்னவென்று எழுதுவது?

“தமிழ் நேசன்” என்ற, தக்கதோர் நாமமேற்று; இப்பத்திரிகை எவ்வழியில் தகுந்துள்ளது? இப்பத்திரிகை “தமிழ் நேசன்” என்னும் தன் நாமத்திற்கேற்ற நயமான வியாசங்களை தாங்கிவருகின்றதா அல்லது சுயநலங்கருதும் “பார்ப்பன நேசன்” என்னும் பெயருக்கேற்ப, பக்கா வியாசங்களை அடக்கி வருகின்றதா வென்பதை பார்ப்பன வகுப்பைச்சார்ந்த சான்றோர்களும் அவ்வகுப்பையல்லாத அறிவாளிகளுமே அனுமானித்தல் வேண்டும். இப்பார்ப்பன பத்திரிகையினால் நாம் அடையும் பலன்யாது? சிலமாசங்கள் அல்லது கிழமைகளுக்கு முன்னாலேயே மற்றப் பத்திரிகைகளின் மூலமாய் முற்றுமறிந்தபின், பழைய சில வியாசங்களையும், முப்பது அல்லது நாற்பது காசு, நாள் விதங் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் கூலியாளர்களையும் சொற்ப சம்பளமெடுக்குந் தொழிலாளர், உத்தியோகஸ்தர்களையும், அதிக பணம் கொடுத்து அந்நியபானங்களாகும் “டீபீர்” “நாய்பீர்” முதலிய லாகிரி வஸ்துக்களை அருந்தி அநியாயமாய்க் கெட்டலைந்து போகுமாறு தூண்டச்செய்யுந் துலக்கமான விளம்பரங்களையுமல்லாது வேறு எந்தத் துறையில் நம்சமூக முன்னேற்றத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கு மேற்ற அரிய வியாசங்களை அடக்கி வருகின்றது?

சகோதர சகோதரிகளே! நம் அனைவர் மேலும் நாட்டமாயிருந்து நமக்குள் சுயமரியாதை முன்னேற்றம், சகோதரத்துவம் சமூக ஒற்றுமை முதலிய அரிய விஷயங்களை ஆதரித்து நம்மைக்காத்துக்கொள்ளும் பொருட்டு, இவ்வளவு தமிழ் மக்கள் நிறைந்திருக்கும் இந்நாட்டில் எல்லோரும் எளிதாய்ப் பங்குசேரும் வண்ணம் பங்கு ஒன்றுக்கு ஐம்பது காசு அல்லது ஒரு வெள்ளி விதம் ஏற்படுத்தி “லிமிடெட்” ஆக்கி ஓர் தினசரி தமிழ் பத்திரிகையை நடத்த இயலாதா? இனி மேலாவது கொஞ்சம் கண்விழித்து அக்கம் பக்கங்களையும் அயல் நாடுகளையும் பார்த்து பலராலும் “பாவைகளை”ப் போன்று பாவிக்கப்படாமல் பலதுறைகளிலும் பகிரங்கமாய்ப் பல சிறப்புக்களுடனும் பழிப்புக்கிடமாயிருக்கும் நம் பாரததாயை பண்டைநிலைக்குக் கொண்டுவர எத்தனியுங்கள்.

இப் “பார்ப்பன நேசன்” முறைக்கு முறை அநியாயமாய் நம்மவர்கள்மேல் அளந்துகொண்டுவரும் ஆபாச மூட்டைகளைக் கண்டித்து தக்கபதிலெழுதி பொது ஜனங்களுக்கு அறிக்கையிட நம்மவர்கட்கென ஓர் தக்க பத்திரிகையில்லாவிடினும் நம்முயற்சிகள் அனுகூலமாகி ஓர் பத்திரிகையை ஸ்தாபிக்கும்வரை சமயம் நேரும்போது இப்படியான துண்டுப் பிரசுரங்கள் மூலமாய் வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

குறிப்பு:— சென்ற 25-4-28 துண்டுப்பிரசுரத்தில் கனதனவான்களனைவரையும் கேட்டுக்கொண்ட பிரகாரம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு “அகில மலாய சுயமரியாதைச் சங்கம்” ஒன்று கூடிய சீக்கிரத்தில் கோலாலம்பூரில் அல்லது சிங்கப்பூரில் ஸ்தாபிப்பது மிக்க அத்தியாவசியமாயிருக்கின்றபடியால் அன்பர்கள் அனைவரும் ஆங்காங்கு ஒன்றுகூடி வேண்டிய முயற்சிகள் செய்து மேற்படி சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேரவிருக்கும் நண்பர்களின் தொகையை கீழ்காணப்படும் அன்பர்களில் யாருக்காவது எழுத்து மூலமாய் பதிவிக்கும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

விலாசங்கள் 1. பூ. சின்னத்தம்பி செந்தூல், 2 G. S. நாயுடு, 105, மார்க்கட்ஸ்ரீட், சிங்கப்பூர், 3. மு. ப. ள. செட்டியார், 98. அப்பாஸ்ரீட், கோலாலம்பூர், 4 V. P. ராஜகோபால் நாயுடு, 37 ஜாலன் கஞ்சார், கோலக்கஞ்சார், 5. வை. பெ. கோந்தசாமி பிள்ளை, கண்டுருக்டர், 35 காட்ரோட், ஈப்போ.

நம் அரிய பெரிய எண்ணங்கள் கைகூடுமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

“திராவிடன்”

லால்குடி

## சுயமரியாதை மகாநாடு.

9—6—28 தேதி மாலை 9 மணி வண்டியில் திருவாளர்கள் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், கண்ணப்பர், தண்டபாணிபிள்ளை, அழகர்சாமிநாயுடு, அய்யாமுத்துகவுண்டர் முதலியவர்களும் பொன்மலை, நாகைத் தொழிலாளர்களும் திருச்சி ஸ்ரீரங்கம் முதலிய இடங்களிலிருந்து ஸ்ரீமான்கள் ராஜகோபாலபாரதி, டி. வி. கே. நாயுடு, ராவணதாஸ், கலியபெருமாள் நாயுடு, பரமசிவம் செட்டியார் திருமலசாமி செட்டியார் முருகதாஸ் முதலியவர்களும் முசிறி துறையூர் முதலிய இடங்களிலிருந்து பலரும் பல பிரதிநிதிகளும் ஆக சுமார் 200 பேர் வண்டியில் வந்திறங்கினார்கள். ரயில்வே ஸ்டேஷனிலிருந்தே மேளவாத்தியங்களுடன் தலைவர்களும் மற்றவர்களும் ஜாகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

திருவாளர்கள், மகாநாட்டுத் தலைவர் பி. டி. ராஜன் அவர்களும் திருச்சி ஜில்லாபோர்டு பிரசிடெண்டு நாராயணசாமி பிள்ளையவர்களும், லால்குடி தாலூக்கா போர்டு பிரசிடெண்டு ரெட்டியார் அவர்களும் வைஸ் பிரசிடெண்ட் பரமசிவம்பிள்ளையவர்களும் பிரபல மிராசுதார் வாண்டையார் அவர்களும் சுமார் 10–30 மணிக்கு லால்குடி வந்து சேர்ந்தார்கள் தலைவர்கள் ஊர்வலமாக வாத்தியங்களுடன் சுமார் 600, 700, பேருடன் மகாநாட்டு மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் சரியாய் 11 மணிக்கு மகாநாட்டு வைபவம் ஆரம்பிக்கப்பட்டதும் திருவாளர் கண்ணப்பர் அவர்களால் பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்பேரில் ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத்தாயாரம்மாளவர்களால் மகாநாடு திறந்து வைக்கப்பட்டவுடன் வரவேற்புக்கழகத் தலைவர் திரு கொச்சியம் வீராசாமிப்பிள்ளை பி. ஏ. அவர்கள் வரவேற்புப் பிரசங்கம் நிகழ்த்தியதும் திரு ராஜன் அவர்களை அக்கிராசனராக திருவாளர்கள் லால்குடி தாலூகா திருமங்கலம் மிராசுதாரும் தாலூகா ஜில்லா போர்டு மெம்பருமான திரு மீனாட்சிசுந்தர முதலியார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு மிராசுதாரரும் தாலூக்கா ஜில்லா போர்டு வைஸ்பிரசிடெண்டுமான பரமசிவம் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு திருவாளர்கள் ராஜா சிதம்பரரெட்டியார், செல்வப் பெருமாள் நாடார், ராமச்சந்திர வன்னியர், திருச்சி விஸ்வநாத பிள்ளை, பூவாளூர் செல்வகணபதி செட்டியார், பெஞ்ச் மாஜிஸ்ட்ரேட் ரங்கசாமி முத்துராஜா, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலிய பலரால் ஆதரிக்கப்பட்டு பெருத்த கரகோஷனிடையே திரு ராஜன் அவர்கள் அக்கிராசனத்தில் அமர்ந்தார். அதுசமயம் கூட்டம் மண்டபம் நிறைந்து மண்டபத்தில் இடமில்லாமல் வெளியில் ஏராளமாகசூழ்ந்திருந்தார்கள். இரண்டுமூவாயிரம் பேருக்கு மேலாகவே இருக்கலாம்.

அக்கிராசனர் ஆசனத்திலமர்ந்ததும் முதல் மந்திரி டாக்டர் சுப்பராயன், சட்ட மெம்பர் கனம் கிருஷ்ணன் நாயர், சென்னை டாக்டர் நடேச முதலியார், சிவகங்கை தாலூக்கா போர்டு பிரசிடெண்டு ராமச்சந்திரன் சேர்வை, பெரியகுளம் பகவதி, மதுரை பி. ஜி. தாமஸ், எஸ். கூடலிங்கம்பிள்ளை, மிஸ் அமிர்தமணி மோஸஸ் அம்மாள் முதலியோர்களிடமிருந்து வந்ததந்திகளும் மற்றும் பல கடிதங்களும் வாசிக்கப்பட்டன, பின் அக்கிராசனர் அவர்களின் உபந்நியாசம் தொடங்கப்பட்டது. அது முடிந்ததும் சரியாய் 1 மணிக்குமகாநாட்டை பகல் போஜனத்துக்காக ஒத்திப் போட்டு போஜனம் முடிந்ததும் நாயக்கர் ஜாகையில் விஷயாலோசனைக்கமிட்டியின் கூட்டம் கூட்டப்படுமென்று சொல்லி மகாநாடு கலைந்தது.

பிறகு 3 மணிக்கு தலைவர் அக்கிராசனத்தின் கீழ் விஷயாலோசனைக் கூட்டம் நடந்தது. சுமார் 30 தீர்மானங்கள் பல விவாதப் பிரதிவாதங்களுக்குப்பின் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

லால்குடியில ஜூன் 9, 10 தேதிகளில் நடைபெற்ற லால்குடி தாலூக்கா பார்ப்பனரல்லாதார் முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் தலைவர்



திரு. பி. டி ராஜன், பி. எ. ஆக்ஸன் எம். எல். ஸி. அவர்கள்.

மறுநாள் காலையில் மகாநாட்டில் 20 தீர்மானங்களும் மாலையில் 10, 15, தீர்மானங்களும் பல அறிஞர்களின் அரிய உபந்யாசங்களுக்கிடையே நிறைவேறி மாலை 5 மணிக்கு மகாநாடு தலைவர்முடிவுரையுடனும் சந்தனம் தாம்பூலம் புஷ்பமாலை வினியோகத்துடனும் சந்தோஷ ஆரவாரத்தினிடையே முடிவுபெற்றது

இரண்டு நாளும் மாலையில்மகாநாட்டுமண்டபத்துக்கு முன்னால் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. ஒவ்வொருநாளும் ஆதிதிராவிடர்கள், பெண்கள், பார்ப்பனர்கள் உள்பட பல ஆயிரக்கணக்கான பேர்கள் வந்து கூடியிருந்து மாலை 6மணி முதல் இரவு 10மணி வரையில் உபந்நியாசம் கேட்ட வண்ணமாகவே இருந்தார்கள். பொதுக் கூட்டங்களில் திருவாளர்கள் கண்ணப்பர், அழகர்சாமி நாயுடு, தண்டபாணிப்பிள்ளை, அருப்புக்கோட்டை கருப்பையாபிள்ளை விருதுபட்டி லக்ஷ்மணபிள்ளை, அலர்மேலு மங்கைத்தாயாரம்மாள், ஜே. என். ராமநாதன் மிஸ், தங்கம்மாள் அவர்களும் மற்றும் சிலரும் பேசினார்கள்.

இம்மகாநாடு லால்குடியில் கூடினதின் மூலம் அநேக மக்களுக்கு புது உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லவேண்டும் மகாநாடுகூடி இவ்வளவு வெற்றியுடன் நடைபெறுவதற்கு லால்குடி சுற்றுப்புறத்திய மிராசுதார்களும் பல பெரியார்களும் காரணஸ்தர்களாயிருந்தபோதிலும் திருவாளர்கள் பூவாளூர் செல்வகணபதிசெட்டியார், பொன்னம்பலனார், திருச்சி டி. எம். நாராயணசாமிப்பிள்ளை, விஸ்வநாதபிள்ளை, பரமசிவம்செட்டியார் முதலியோர்களுடைய உழைப்பும் முயற்சியும் முக்கியமானதென்றே சொல்ல வேண்டும்.

மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்தமுசிறி துறையூர் கனவான்கள் தங்கள் தங்கள் தாலூக்காக்களில் சமீபத்தில் இம்மாதிரி மகாநாடு கூட்டப்போவதாகவும் எல்லாக்கனவான்களும் வந்திருந்து நடத்திக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுபோனது குறிப்பிடத் தகுந்தது. இரண்டு மூன்று நாளும் லால்குடியில் பெரிய உத்சவமாகவே காணப்பட்டது. சிறப்பாக ஆதிதிராவிடர்களுக்கும் பெண்மணிகளுக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சியை யாராலும் அளவிட முடியாதென்றே சொல்லலாம்.

சாப்பாடும் சிற்றுண்டிகளும் வெகு திருப்திகரமாக காலாகாலங்களில் அளிக்கப்பட்டது மிகவும் குறிப்பிடத்தக்கது. அன்றியும் வாலண்டியர்கள் சுமார் 80 பேர் வேண்டிய சகாயம் செய்தது மிகவும் பாராட்டத்தக்கது. நிறைவேறிய தீர்மானங்கள் பின்னால் வெளிவரும். ஒரு நிருபர்.

### திருச்சி திரு. கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளையவர்களின் சுற்றுப்பிரயாணம்.

ஜூன் மாதம் 15ந்தேதி காலை திருச்சியை விட்டுப் புறப்பட்டு ஓமாந்தூருக்கும் 16 தேதி துறையூர் வாலிபர் சங்கத்திற்கும் 17, 18 சேலம் ஜில்லா செந்தாரப் பட்டிக்கும் 19 தேதி வயிறு செட்டிபாளையம் துறையூருக்கும் 20 தேதி திருச்சிக்கும் 21 தேதி காலை நாகைக்கும் மாலை நாகூர் திராவிடசங்கத்திற்கும் 22 தேதி காரைக்குடி பொதுக் கூட்டத்திற்கும் 23 தேதி தேவகோட்டை மகாஜன சங்க ஆண்டு நிறைவு விழாவிற்கும் சென்று சுயமரியாதைப் பிரசாரம் நடத்திவிட்டு 24 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருச்சி வந்து சேரக்கூடும் என்று மு. சுப்பிரமணிய பிள்ளை அறிவிக்கிறார்.

### குறிப்பு.

மூன்றும் பக்கத்தில் காணப்படும் "ருதுவானபின் நடந்த விவாகத்தால் இந்துதர்மம் கெடவில்லையே" என்ற கட்டுரையை எழுதியவரின் பெயர் சில பிரதிகளில் குறிக்கப்படவில்லை அக்கட்டுரையை எழுதியது ஸ்ரீ கைவல்யசாமியாராவர்.



**மீறுகிறார்கள்.**

**திருச்சி மேஜிஸ்ட்ரேட்டு, திருவாளர்கள் கண்ணப்பர், தண்டபாணி பிள்ளை, ராமநாதன் ஆகிய மூவரையும் மலைக்கோட்டைக் கோவிலுக்குள் பிரவேசிக்கக்கூடாது என்று 144 உத்திரவு போட்டிருப்பதால் திரு. கண்ணப்பரும் தண்டபாணி பிள்ளையும் அதை மீறி சிறைவாசம் அனுபவிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.**

குடி அரசு

ஈரோடு விபவ௵ ஆனி௴ 4௳

# “நவசக்தி” முதலியாரின் நாணயம்.

நாம் சென்ற வாரம் “குடி அரசி”ல் திருவாளர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களைப் பற்றி எழுதியதில் “நவசக்தி”யின் “சீர்திருத்தம்” என்கின்ற கட்டுரையானது திரு. முதலியாரால் பேடித்தனமாகவும் திருட்டுத்தனமாகவும் நம்மைக் குறிப்பிட்டே ஜாடையாக எழுதப் பட்டதென்றும் பொருளைக்காட்டியதோடு அதை நாம் மறுக்கவோ கண்டிக்கவோ ஆரம்பித்தால் உடனே திரு முதலியார் “அது குடி அரசைப் பற்றி எழுதவில்லை” என்றும் “பொதுப்பட எழுதினது” என்றும் எழுதி நழுவப் பார்ப்பார் என்றும் எழுதியிருந்தோம். அதுபோலவே இவ்வாரம் “நவசக்தி”யில் திரு. முதலியார் அவர்கள் “குடி அரசின் குதர்க்கம்” என்னும் தலையங்கத்தில் நாம் குறிப்பிட்டபடியே தமது பழம் குணத்தைக் காட்டியிருக்கிறார். அதாவது,

“குடி அரசு” குதர்க்கத்தில் பேர்பெற்றது என்றும், அது தோன்றியது முதல் யாரையேனும் போருக்கிழுப்பதே அதன் வேலை என்றும், அது இவ்வாரம் தம் மீது (திரு முதலியார் மீது) நாட்டத்தைச் செலுத்தி இருப்பதாகவும் எழுதிவிட்டு,

“நவசக்தியில் தோன்றிய ‘சீர்திருத்தம்’ என்னும் கட்டுரை பொது நெறி பற்றி எழுதப்பட்டதே தவிர ‘குடி அரசின்’ ஆசிரியரையோ அதன் இயக்கத்தையோ உளம் கொண்டு எழுதவில்லை” என்றும் எழுதியிருக்கின்றார்.

இப்படி திரு. முதலியார் எழுதி மறையப் பார்ப்பார் என்று நாமும் நமது நண்பர்களும் முன்னமே நினைத்ததுதான். ஆனாலும் பின்னை அது யாரைப்பற்றி எழுதினது என்று கேட்டு, இம்முறை திரு. முதலியாரின் நாணயத்தின் யோக்யதையை சந்திக்கு இழுத்துவிட வேண்டிய எண்ணத்துடன்தான் சென்ற வாரம் ‘குடி அரசில்’ “திரு. வி. கலியாண சுந்தரமுதலியார்” என்கின்ற தலையங்கம் எழுதினோம்.

திரு. முதலியார் உடனே வெகு அவசரமாக அடுத்த வாரமே அது நம்மைப்பற்றி எழுதவில்லை என்று எழுதி தப்பித்துக் கொள்ளப் பார்த்தாராயினும் வெகு ஆத்திரத்தின் மீது 5, 6 கலம் நீட்டி எழுதிய அந்த கட்டுரையில் தம்மை அறியாமலே தமது விஷம் முழுவதையும் கக்கிவிட்டார். அதாவது,

“குடி அரசில் வரும் கட்டுரைகளில் பல எமக்கு (திரு. முதலியாருக்கு) பிடிப்பதில்லை” என்றும் “அதற்காக நான் அறப் போர் தொடுக்கப் போகிறேன்” என்றும் எழுதி அவ்வறப் போரிட நம்மை அறை கூவி அழைத்திருக்கிறார்.

அதோடு “ஆண்டவன் அருளை முன்னிட்டே இப்போர் முனையில் நான் இறங்குகிறேன்” என்று சொல்லி ஆண்டவன் அருளில் போய் ஒளிகிறார். அதோடு நில்லாமல் “மூடர்களால் தாக்கப் பெறும் பேறும் கொல்லப் பெறும் பேறும் எமக்கு கிடைத்தால் அதுவே போதும்” என்றும் சோம்பேறிஞானமும் பேசி பேடித்தனத்தையும் காட்டுகிறார்.

அன்றியும் “பெரியோர்களை இழித்து உரைகளால் தூற்றும் கட்டுரைகளைக் கொண்டு வெளிப்பட்டுள்ள ஒரு பத்திரிகையுடன் (குடி அரசுடன்) போர் புரிந்து உயிர் நீப்பதே எனது பிறவிப்பயன்” என்றும் எழுதுகிறார்.

அன்றியும் “குடி அரசுத் தலைவருக்கு ஆள்வலி, தோள்வலி, பொருள் வலியுமுண்டு; எமக்கோ அத்தொன்றுமில்லை; ஆதலால் ஆண்டவன் அருள்வலிகொண்டு போர் தொடங்குகிறேன்” என்றும் எழுதி இருக்கிறார். இவ்வெழுத்துக்களின் யோக்கியதை எப்படி இருந்தாலும் இவ்வெழுத்துக்களுக்குள் எவ்வளவு புரட்டும் இழிகுணமும் நிறைந்திருந்தாலும் ஒன்றுமாத்திரம் வெளிப்படையாய்த் தெரிகிறதா இல்லையா என்றுதான் கேட்கின்றோம்.

அதாவது, தாம் இதுவரை எழுதிவந்த ‘சீர்திருத்தம்’ என்னும் கட்டுரைகள் ‘குடி அரசை’யோ அதன் கொள்கைகளையோ குறித்ததல்ல என்றும், பொதுவான சீர்திருத்தத்தையே குறிக்கொண்டு எழுதப்பட்டது என்றும் எழுதி வந்ததும் இப்போது இப்படி எழுதுவதும் யோக்கியப் பொறுப்பற்ற பொய்யா அல்லவா என்பதுதான்.

இம்மாதிரியான யோக்கியதையைப்பற்றி, நாம் வசை மொழிகள் எழுதிவிட்டதாக மிக்க வருந்துகிறார். அதோடு இவரை கண்டித்திருக்கும் வார்த்தைகள் சுயமரியாதைக்கு ஏற்றதல்ல என்றும் எழுதுகிறார். எனவே பிறர் செய்யும் அயோக்கியத்தனங்களை மறைத்து வைப்பதுதான் திரு. முதலியார் அவர்கள் அகராதியில் சுயமரியாதைக்கு பொருள் போலும்.

தவிர திரு. முதலியார் நம்முடன் தொடங்கியிருக்கும் போர் அறப்போரா மறப்போரா என்பதையும் பொது மக்கள் யோசித்துப் பார்க்கவேண்டுமாய் விரும்புகிறோம். அறப்போர் என்பது எதிரி என்ன குற்றம் செய்தான் என்பதை எடுத்துக்காட்டி, அது குற்றந்தான் என்பதை ருசுப்படுத்தி, அதன் மீது போர் தொடுத்து கண்டித்தல் யோக்கியர்கள் செய்யும் அறப்போருக்கு உரிய தர்மமாகும்.

நமது திரு. முதலியார் அவர்களின் அறப்போருக்கு இந்த தர்மங்கள் வேண்டியதில்லை போலும். அன்றியும் ‘நாஸ்திகம்’ ‘பெரியோரை நிந்தித்தல்’ என்று சொல்லி விட்டு, பேடித்தனமாக வாயில் வந்தபடி மறைவாக வைதுவிட்டு, யாராவது ஏன் அப்படி செய்தீர்கள் என்று கேட்டால் “உம்மையல்ல” என்று சொல்லிவிடுவதுதான் அறப்போர்க்குற்ற தர்மங்களாகிவிடும் போலும். இவ்வித அறப்போருக்கு நமது திரு. முதலியாருக்கு கடவுள் அருள் வேறு வேண்டுமாம்.

கடவுள் ஒன்று இருப்பதாக திரு. முதலியார் அவர்கள் உண்மையிலேயே எண்ணியிருப்பாரானால் அதன் அருளை தமக்குமாத்திரம் சொந்தமாகக் கொண்டிருக்கமாட்டார். அதுவும் தன்னுடைய ஒழுக்கமும், நாணயமும், ஆண்மையும் அற்ற மறப்போருக்கு ஆண்டவன் அருள் கிடைக்குமென்று ஒரு க்ஷணமும் நினைத்திருக்கவு மாட்டார். எனவே, உலகத்தில் எப்படிப்பட்டவர்கள் தொட்டதற்கெல்லாம் கடவுளை நினைக்கின்றார்கள் என்பதற்கும், கடவுள் அருளை வேண்டுகிறார்கள் என்பதற்கும் இதுவே ஒரு உதாரணமாகும்.

நிற்க திரு. முதலியாரவர்கள் புராணங்களைப்பற்றி எழுதும்போதும் திருட்டுத்தனமாகவே எழுதுகிறார். அதாவது புராணங்களைப்பற்றிய தமது கருத்து நேயர்களுக்கு முன்னமே தெரியுமாம். ஆதலால் இப்பொழுது எழுதவேண்டியதில்லை என்று மறைந்துகொண்டார். இந்தப் போருக்கோ கட்டுரைக்கோ ஜீவாதாரமான விஷயம் இப்புராண விஷயந்தான் என்பது யாவரும் அறிந்ததாகும். அப்படியிருக்க அதைப்பற்றி மற்றுமொரு சமயம் எழுதப்போகிறாராம். எப்பொழுது எழுதுவது? என்பது நமக்கு விளங்கவில்லை. [illegible]ங்களைப்பற்றி குறை கூறுவதாக நம்[illegible] குற்றம் சுமத்தும்போது அதன் யோக்கியதைகளை எடுத்துச் சொல்லாமல் மற்று எப்போது சொல்லுவதற்காக அதை வைத்துக்கொண்டிருக்கின்றார் என்பது விளங்கவேண்டாமா? இதற்குத்தான் அறப்போர் என்று பெயரிட்டிருப்பதுடன் ஆண்டவன் அருளை நம்பி போருக்கு எழுந்துவிட்டாராம். அதோடு கடைசியாக ஒருபடி இறங்கி “புராணங்களை கவி அழகு, இயற்கை வருணனை முதலியவற்றைக் கருதிக்கூடவா படிக்கக் கூடாது” என்கின்றார். அவ்வியற்கை அழகுக்கும் கவி அழகுக்கும் உதாரணமாக கம்பராமாயணத்தையும், பெரிய புராணத்தையுமே காட்டித் துணிந்துவிட்டார். இவ்வளவாவது இறங்கி வந்தது நல்ல காலமே.

கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும், கவியழகையும் வருணனையையும் குறிக்கொண்டு படிப்பவரிடம் நமக்கு வேலையில்லை என்பதை திரு. முதலியார் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஆனால் பாமர மக்களை கூட்டிவைத்து அதை படிப்பதுதான் பக்தி என்றும், அதை கேட்பதுதான் மோட்சமென்றும், அதில் உள்ளவைகளை நம்பாதவன் நாஸ்திகன் என்-

றும், முரடன் என்றும், கடவுளையும் கடவுள் நெறியையும், கடவுள் நெறியை உணர்த்திய பெரியார்களையும் தூஷிப்பவன் என்றும் சொல்லுகின்றார்களே அம்மாதிரியான மூடர்களின் பிரசாரம் ஒழிய வேண்டும் என்பது தான் நமது கவலை.

மற்றும் திரு. முதலியார் அவர்கள் எழுதுவதாவது, "பத்திரிகை உலகில் ஈண்டு 'குடி அரசு' உலவுவதுபோல கலைகளில் குப்பைப் புராணங்கள் உலவுகின்றன" என்றும்

"நாயக்கர்போன்றாருக்கு உலகில் இடமிருக்கும் வரை புராணங்களுக்கும் இடமிருந்தே தீரும்" என்றும்

"புராணக்கலைகளை நாயக்கர் போன்றாருக்கு உவமையாய்க்கூறலாம்" என்றும் எழுதி இருக்கிறார்.

இம்மூன்று வாக்கியங்களாலும் நாயக்கரை திரு. முதலியார் அவர்கள் எவ்வளவு இழிவாய்க்கருதி இருக்கிறார் என்பது ஒருபுறமிருந்தாலும், அப்படி இழிவாய் கருதுவதிலும் நமக்கு என்ன லாபமிருக்கின்றது என்று பார்த்தால் இதிகாச புராணங்கள் என்பவைகளை அவ்வளவு இழிவாய்க் கருதியிருப்பதாக திரு. முதலியார் இப்போதாவது ஒப்புக்கொள்கின்றாரே, அதுவே நமக்கு ஒரு பெரிய லாபமாகக் கொள்ளலாம். ஆனால் இந்தப் புத்தி எவ்வளவு நேரம் நிற்குமோ?

உள்ள இதிகாசங்களையும் புராணங்களையும் வெறும் கலையாக ஒப்புக்கொண்ட பிறகும், மற்றும் அவை "நாயக்கரை"ப்போன்ற அவ்வளவு இழிகுணமுள்ளதாகத் தீர்மானித்த பிறகும், திரு. முதலியார் அவர்கள் கடவுளையும், கடவுள் நெறியையும், கடவுள் நெறியை உணர்த்திய பெரியாரையும் வேறு எதிலிருந்து கண்டுபிடித்தார் என்பதையும் எப்படிப்பட்ட கடவுளையும் கடவுள் நெறியையும் நெறி உணர்த்திய பெரியாரையும் நாயக்கர் வைகிறார் என்பதையும் திரு. முதலியார் ஆண்மை இருந்தால் இப்போதாவது சொல்ல முன் வருவாரா என்றுதான் கேட்கின்றோம்.

எனவே, திரு. முதலியார் அவர்கள் "சீர்திருத்தம்" என்று எழுதிய கட்டுரைகள் நம்மையும் நமது இயக்கத்தையும் பற்றி எழுதியதுதான் என்று நாம் கொண்டது சரியென்றும், திரு முதலியார் நம்மைப் பற்றி எழுதியது அல்ல என்று சொல்வது நாணயம் பொறுப்பற்ற பேடித்தனம் என்றும், முதலியார் அவர்களாலேயே 13-6-28-ல் 'நவசக்தி'யில் 'குடி அரசின் குதர்க்கம்' என்று எழுதப்பட்ட தலையங்கத்திலேயே தாம் முன் எழுதிய 'சீர்திருத்தம்' என்னும் கட்டுரையில் நம்மைப்பற்றியே எழுதியதாகவும், அதுவும் கடவுளையும் கடவுள் நெறியையும் அந்நெறி உணர்த்திய பெரியார்களையும் குறை கூறுவதாலும் நாஸ்திகம் பரப்புவதாலுமே நம்முடன் இப்போர் தொடுக்க நேரிட்டது என்றும் எழுதி ஒப்புக்கொண்டிருப்பதையும் வாசகர்களுக்கு மெய்ப்பித்துவிட்டோம் என நினைக்கிறோம்.

மற்றும், திரு. முதலியார் அவர்களின் கட்டுரையின்கண் காணும் இழிமொழிகளுக்கு அதாவது சிற்றினம் என்றும், நாய் என்றும், புன்மொழி என்றும், நாயக்கர் இருமாந்தவனென்றும், நாஸ்திகத்தை புகுத்துகிறவர் என்றும், 'குடி அரசு' இழிவுரை உமிழும் பத்திரிகை என்றும், 'குடி அரசு' கடவுள் நெறிக்கும் கலைகளுக்கும் கேடு சூழ்ந்து வருகின்றது என்றும், மற்றும் அதுபோன்று காணும் பழிப்புகளுக்கும் இழிமொழிகளுக்கும், மற்றும் அங்கு கண்ட பலவற்றிற்கும் பின்னால் எழுதுவோம்.

# கொங்கு வேளாள சமூகத்தாருக்கு ஓர் வேண்டுகோள்.

அன்புமிக்க ஐயன்மீர்!

தற்சமயம் கொங்கு வெள்ளாள வாலிபர்கள் மகா நாடு 9—6—28-தேதியில் கொடுமுடியில் நடந்தேறிய விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததேயாகும்.

நிற்க, வேளாள குலத்திலேயே உதித்தவர்கள் அநேகம்பேர் உயர்ந்த பதவியை அடைந்து வருகின்றார்கள். இதிலும் கொங்கு வேளாள குலத்திலுதித்த கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் சென்னை மகாணத்திற்கே முதல் மந்திரியாய் இருந்தும் அநேக இடங்களுக்குச் சென்று வரவேற்புபத்திரம் முதலிய அநேக பத்திரங்கள் பெற்றுக்கொண்டு ஜனங்களுக்கு உதவிபுரிந்தும் வருகின்றார். இப்படியிருக்க நம் குலத்தில் உதித்தவர்களே இவ்வளவு மேல் பதவிகளுக்கு சென்றிருக்கும்போது இன்னும் மற்ற குலத்தில் பிறந்தவர்கள் மேல்பதவிக்கு செல்வதினால் நம்ம குலத்தாருக்கு என்ன அவமானம்? இப்படி இருக்க கொடுமுடியில் டாக்டர் சுப்பராயன் அவர்கள் "கோயமுத்தூர் ஜில்லா போர்டில் 24 மெம்பர்கள் வேளாளர்களாயிருந்தும் ஒற்றுமையில்லாமலும் கக்ஷிப்பிரதிகக்ஷியிருந்தமையாலும் வேறு ஒரு ஜாதியார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்" என்று சொல்லியிருக்கிறார். 24 பேர்கள் வேளாளர்களாயிருந்தும் நம்ம வகுப்பினருக்கே செய்து வைக்கவேண்டுமென்று ஆவலுடன் இல்லாமல் ஏன் அயலார் ஒருவரை தேர்ந்தெடுக்கின்றார்கள்? மேடி 24 மெம்பர்களுக்கும் புத்தியில்லையா! அந்த ஸ்தானத்திற்கு யார் தகுந்தவர் என்று யோசிக்காமல் வெறும் வகுப்பை நினைத்தே ஓட் சுதந்தரத்தைக் கொடுத்து விடுவார்களா? அப்படியல்ல: அந்தஸ்தானத்திற்குப் போய் பரிபாலனம் செய்ய நம்ம குலத்தில் உதித்தவர்கள் தற்சமயத்தில் தகுதியற்றவராய் இருந்ததால் அன்னியரை அதுவும் ஒரு வேளாளரை தேர்ந்தெடுக்கலாயிற்று. அப்படி ஒரு வேளாளரை தேர்ந்தெடுத்தது நம்ம வேளாள குலத்திற்கே ஓர் பெரும் பாக்கியமாயிற்றே ஒழிய அவமானம் ஒன்றும் அடையவில்லையே.

நமக்கு இல்லாவிட்டாலும் பிறருக்கு கொடுத்து உதவுவது நமது கடமையாயிருக்க ஒரு வேளாளருக்கு கொடுத்ததைப்பற்றி வேளாள சமூகத்தார் இவ்வளவு வேற்றுமை காட்டுவது நியாயமாகுமா? அன்னியர் என்றால் அவர் யார்? அவரும் நம்மைப்போல ஒரு வேளாளர் தானே ஒழிய வேறு வகுப்பாரல்லவே. கொங்கு வேளாளருக்கே எல்லாப் புகழும் பெருமையும் அதிகாரமும் வேண்டுமென்றால் மற்ற வேளாளர் கதி என்ன ஆவது; டாக்டர் சுப்பராயனைப்போல் மற்ற வகுப்பார் நினைப்பதானால் இவருக்கு மந்திரி வேலை கிடைக்க நியாயம் உண்டா? மகாத்மா காந்தியவர்கள் கதரைக் கட்டிக்கொண்டு ஜாதிவித்தியாசம் குலத்து வித்தியாசம் பாராட்டும் படியாய் சொன்னாரா? டாக்டர் சுப்பராயனை போன்றவர் சமாசம், கதர், மதுவிலக்கு இவைகளைப்பற்றி அதிக ஊக்கத்துடன் சொல்லி முன்னேற்றம் அடையும்படி சொல்லவேண்டியிருக்க, அன்றியும் சென்னை மாகாணத்திற்கே பொதுவாய் இருக்க வேண்டியிருக்க, ஒருவகுப்பின் சார்பாகவும், ஒரு குலத்தின் சார்பாகவும் வகுப்புக்குள் வகுப்பு பிரிவு உண்டாகும மாதிரி சபையில் பேசினால் ஏனையோர்களுக்கு எப்படி சமாசம் வரும்? மற்ற வகுப்பாரும் குலத்தாரும் என்ன நினைப்பார்கள்? மகாத்மா காந்தி கொள்கையை அனுசரித்து நடக்கிறவர் இப்பேர்ப்பட்ட உள்பிரிவினை காரியங்கள் செய்தால் மற்ற சகோதரர் சகோதரிகளுக்கு எப்படி சமாசம், கதர், மதுவிலக்கு இவைகளின் பேரில் ஊக்கம் ஏற்படும்? இந்த ஜில்லா போர்டு பிரசிடெண்ட் பிரசாரத்திற்காகவா கொடுமுடியில் வேளாள வாலிபர்கள் மகாநாடு கூட்டப்பட்டது? ஓட்டுப் பிரசாரத்திற்காகவா மந்திரி அவர்கள் மலையிலிருந்து கீழ் இறங்கி கொடுமுடிக்கு வந்தார்? நம்ம குலத்தவர்கள் மந்திரி பதவி, கவுன்சிலர்பதவி, ஜில்லா பதவி, தாலுக்கா பதவி, அந்த பதவி. இந்த பதவிகளுக்கு போனால்தான் வேளாளர்கள் முன்னேற்றம் அடைவார்களோ? இதற்காகத்தான் கொடுமுடியில் மகாநாடு நடந்ததா? இம்மகா நாட்டின் நடவடிக்கையால், தெரியாத வாலிபர்களுக்கும்விஷத்தை ஊட்டினதுபோல் வகுப்பு துவேஷத்தை ஊட்டியாய் விட்டது. அன்றியும் வேளாளர்களில் உள்ள மற்ற வகுப்பாருக்கும் கொங்கு வேளாளர் மீது துவேஷமும் அவநம்பிக்கையும் ஏற்பட இடமாய் விட்டதா இல்லையா? நம் சமூகம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால், கதர், மதுவிலக்கு, சமாசம் இவைகளைப்பற்றியும் மகாத்மா காந்தியின் கொள்கையை கைக்கொள்ளும்படிக்கும சிறியோர்களுக்கு அதிக ஊக்கத்துடன் சொல்லி வேளாள சமூகத்துக்கு கிராமம் கிராமமாய் போய் நமக்குள்ளிருக்கும் குறைகளை நீக்கச் செய்து மகாத்மாவினுடைய கொள்கையைப் பற்றிச் சொல்லியும், கெட்ட காரியங்களுக்கு பிரவேசிக்காமல் இருப்பதற்காக சங்கங்கள் ஸ்தாபித்தும் முன்னேற்றம் அடையும்படி ஊக்கத்துடன் தெரிவித்து வரும்மின்! எழுமின்! என்று மகா நாட்டில் போதிக்காமல், 'நீ அந்த பதவிக்குச் செல், அவன் இந்த பதவிக்குச் செல்லட்டும்; வேளாளர்கள் உதவி செய்யுங்கள்' என்று போதித்தால் வேளாளர் சமூகம் முன்னேற்றம் அடைந்து விடுமா? இனிமேலாவது இம்மாதிரி கூட்டங்களை பதவி வேட்டைக்கு உபயோகித்துக் கொள்ளாமல் மகாத்மாவின்கொள்கையைப்பற்றி சொல்லி வேளாள வாலிபர்களை முன்னேற்றம் அடையும்படி செய்வார்களென்று நம்புகிறேன். நானும் ஒரு வேளாள குலத்தில் பிறந்தவன்

## பார்வதிக்கும் பரமசிவனுக்கும் சம்பாஷணை.

சித்திரபுத்திரன் எழுதுவது.

*பார்வதி:—* எனது பிராணநாதனாகிய ஓ சிவபெருமானே! ஆகாயத்தில் பறக்கின்ற கெருடன் என்கின்ற பட்சியைப் பார்த்து பலர் சாலையிலும், மாலையிலும் கன்னங் கன்னமாய் போட்டுக்கொள்ளுகின்றார்களே அது எதற்காக நாதா?

*பரமசிவன்:—* கண்மணி! இது உனக்குத் தெரியாதா? கருடன் நமது அடிமையாகிய மகாவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால் விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக் கண்டால் கன்னத்திலடித்துக்கொள்ளுகிறார்கள்.

*பார்வதி:—* ஓ ஹோ அப்படியா சங்கதி! சரி அப்படியானால் நமது அடிமை வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும்போது நம்முடைய வாகனமாகிய காளை மாட்டைக் கண்டால் ஏன் யாரும் கன்னத்திலடித்துக் கொள்வதில்லை? அன்றியும் வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள், தடி அடிக்கிறார்கள், செக்கில் கட்டி ஆட்டுகிறார்கள், அடித்துக் கட்டி தின்றுவிடுகிறார்களே அது ஏன்?

*பரமசிவன்:—* நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை, நன்றாக சாம்பலை பூசிக்கொள்ளத்தான் தெரியும். நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத் தெரியாது.

*பார்வதி:—* அதுதான் போகட்டும், நமது குமாரனாகிய கணபதியின் வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டால் ஏன் கன்னம் கன்னமாய் அடித்துக்கொள்ளாமல் தடி எடுத்து அடித்துக் கொன்றுவிடுகிறார்கள்? அய்யோ பாவம்!

*பரமசிவன்:—* கணபதியின் பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது ஏனென்றால் கணபதிக்கு அபிஷேகம் செய்யும்போது அவனது வாகனமாகிய கல்லுப் பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள் அதற்கும் பால், நெய், தயிர் ஊற்றி கொழுக்கட்டையை வைப்பார்கள். உயிருடன் காணும்போது ஓடி ஓடி அடிப்பார்கள். நம் பக்தர்கள் யோக்யதையே இப்படித்தானே! இந்த வெட்கக்கேட்டை யாருடன் சொல்லுவது!

*பார்வதி:—* அதுதான் போகட்டும், தங்களுடைய மற்றொரு வாகனமாகிய நாயைக் கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக் கொள்ளாமல் எல்லோரும் சோடு! சோடு! என்று விரட்டுகின்றார்களே அது என்ன காரணம் நாதா?

*பரமசிவன்:—* கண்மணி அதுவும் பக்தர்களின் அறியாததனம்தான் ஆனாலும் அது மலம் சாப்பிடுகின்றதல்லவா? ஆதலால் அதன்மீது சிலர் அசுசிப்படுகின்றார்கள் போல் இருக்கின்றது.

*பார்வதி:—* என்ன நாதா, வைரவக்கடவுள் வாகனம் மலம் சாப்பிட்டால் மகாவிஷ்ணுவின் வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுசியமான வஸ்துக்களை யெல்லாம் சாப்பிடுகின்றதே! அதையெல்லாம் அந்த பக்தர்கள் மன்னிக்கும்போது மலம் சாப்பிடுவதை மாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக்கூடாது?

அதுதான் போகட்டும் நமது குமாரன் வாகனமாகிய மயிலைக்கண்டால் ஏன் முருக பக்தர்கள் கன்னங்கன்னமாய் போட்டுக் கொள்ளுவதில்லை? அன்றியும் ஆட்டைக் கண்டால் அடித்துத் தின்றுவிடுகிறார்களே! அவன் கொடியாகிய சேவலைக் கண்டால் அறுத்துத்தின்றுவிடுகிறார்கள்? இது என்ன அநியாயம்!

*பரமசிவன்:—* அது அந்த பக்தர்களின் பக்திக்குறைவு அதற்கு நாம் என்ன செய்யலாம்.

*பார்வதி:—* நாதா! சரி சரி, இதையெல்லாம் பார்க்கும்போதுதான் எனக்கு மிகவும் வெட்கக்கேடாயிருக்கின்றது நமக்குக் கீழ்பட்ட விஷ்ணுவின் வாகனத்திற்கு மாத்திரம் உலகத்தில் இவ்வளவு கௌரவமும் அவர் பக்தர்களுக்குமாத்திரம் இவ்வளவு பக்தியும் இருப்பதும் நமது வாகனங்களுக்கு இவ்வளவு மரியாதைக் குறைவும் நமது பக்தர்களுக்கு இவ்வளவு பக்திக் குறைவும் இருப்பதும் எனக்கு வெளியில் தலை நீட்ட முடியவில்லையே தவிர விஷ்ணுவின் பெண்ஜாதியான மகாலக்ஷிமிகூட இதனாலேயே அடிக்கடி என்னைப்பார்த்து பரிகாசம் பண்ணுகின்றாள் தவிர நம்முடைய பக்தர்களிலும் பலர் அறிவில்லாமல் நம்ம வாகனத்தை மரியாதை செய்யாமல் இருப்பதோடல்லாமல் விஷ்ணு வாகனத்திற்கு விஷ்ணு பக்தர்களைப்போலவே கன்னங்கன்னமாய் போட்டுக்கொண்டு மரியாதை செய்கிறார்களே இது என்ன மானக்கேடு! தாங்களே யோசித்துப் பாருங்கள்.

*பரமசிவன்:—* என்னசெய்யலாம் சகி? நம் தலையில் பிரம்மன் இப்படி அவமானப் படும்படியாக விதித்துவிட்டானே விதியானால் விட்டது சொல்பார்ப்போம் என் கண்மணி! நீ இதற்காக அழவேண்டாம் உன்னைப்பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.

*பார்வதி:—* சரி சரி இதற்காக நான் ஒருத்தி அழுவது போதாதாக்கும் இனி நீங்கள் வேறு அழுகவேண்டும்! போனால்போகட்டும் இம்மாதிரி நம் தலையில் எழுதிய அந்த பிரம்மாவை பேசிக்கொள்ளலாம். வாருங்கள் நம்ம வேலையைப் பார்க்க நாம் பேசுவோம்.

## ரங்கூன் தந்தி.

### பர்டோலி சத்தியாக்கிரகம்.

ரங்கூனிலிருந்து திரு. ஆண்டியப்பன் அவர்கள் தந்தி மூலம் தெரிவிப்பதாவது:—

நாளது 12-ந் தேதி மாலை 7-மணிக்கு குஜராத்தி ஹைஸ்கூல் ஹாலில் திருவாளர் ஹிலாட்டன்புரு எம். எல். ஏ. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் பர்டோலி சத்தியாக்கிரகத்தை அங்கீகரிக்கும் பொருட்டு ஒரு பொதுக் கூட்டம் நடை பெற்றது. திருவாளர்கள் 'ரங்கூன் மெயில்' ஆசிரியர் கிரி பார்' அட்-லா, 'பர்மன்தேச' பத்திராதிபர் குரிகான், நேஷனல் இஸ்லாமியா ஸ்கூல் தலைமை ஆசிரியர் கான், சட்டசபை மெம்பர் டயாப்ஜி, சால்வார், 'அருணகிரி' பத்திராதிபர் எஸ். ஆர். எம். ராமநாதன், பர்மா கிலாபத் கமிட்டி காரியதரிசி குத்ருதின், எம். போதான்-பார்-அட்லா, மட்டாஞ்சீத் முதலிய பிரமுகர்களும் இன்னும் பலரும் விஜயம்செய்திருந்தார்கள். இவர்களில் பலர் பல பாஷைகளில் பிரசங்கம் செய்தார்கள். ஸ்ரீ ராமநாதன் அவர்கள் இந்தியாவைப் பற்றியும் சத்தியாக்கிரகத்தைப்பற்றியும் இரண்டு தீர்மானங்களும் ... சொற்பொழிவு நிகழ்த்தினார்.

தீர்மானங்கள் வருமாறு:—

1. பம்பாய் கவர்ன்மெண்டார் பர்டோலி தாலூகா வாசிகளின் மீது அநீதியாயும் கொடூரமாயும் புதுத்தீர்வை விதித்ததின் சம்பந்தமாக பர்டோலி வாசிகள் சர்க்காருடன் சத்தியாக்கிரகம் செய்வதை ரங்கூன் மகா ஜனங்கள் முழுமனதுடன் ஆதரிக்கிறார்கள்.

2. பர்டோலிவாசிகள் நேர்மையும் நியாயமுமான ஒரு போராட்டத்தை நடத்திவருவதால் அதனால் அவர்கள் அடையும்கஷ்ட நஷ்டங்களுக்கு ஈடு செய்ய தாராளமாகப் பணவுதவி செய்யவேண்டுமென்று மகாஜனங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இத்தீர்மானங்கள் நிறைவேறியபின் திரு. போத்தன் ரூ. 100-ம், டாக்டர் ராவ் ரூ. 50-ம், திரு. வி. சுப்பய்ய பட்டர் ரூ. 25-ம், உதவினார்கள். கூட்டம் இரவு 10-மணிக்கு வந்தேமாதர கோஷத்துடன் முடிவு பெற்றது.

---

தான். வேளாளனாய் இருந்தும் இப்படி ஏன் எழுதினேன் என்றால் நம் நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமென்றும் நமது மக்கள் சுயமரியாதையும் சமத்துவமும் சுதந்திரமும் அடைய வேண்டுமென்றும் அநேக நாளாய் அநேக பெரியோர்கள் தங்களுடைய சுகத்தையும் சுதந்தரத்தையும் விட்டுவிட்டு இரவும், பகலும் பாடுபட்டு உரக்கக் கத்தி அன்னம், ஆகாரமில்லாமல் கூவி, சுயமரியாதை, சமரசம், மதுவிலக்கு என்னும் கொள்கைகளைப்பற்றி ஊர் ஊராய், அலைந்து வந்திருக்கும் ஒவ்வொருவரும் நேராகவும், பத்திரிகை மூலமாயும் பார்த்திருக்க, இந்த கொங்கு வேளாள வாலிபர்கள் மகாநாட்டில் சுயமரியாதை, சமரசம், மதுவிலக்கு என்பதைப்பற்றி ஒரு கவலையும் இல்லாமல் வேளாளர்களுக்குள்ளாகவே வித்தியாசம் பாராட்டிப் பேசினதால் வேளாள சமூகத்திற்கே குறைவு வந்துவிடுமோ வென்று பயந்தே இவ்வாறு எழுதத் துணிந்தேன். அடுத்த தேர்தலில் சென்னை கவுன்சிலர், ஜில்லா தலைவர், அங்கத்தலைவர், தாலூக்கா தலைவர், அங்கத்தலைவர்கள், யூனியன் தலைவர், அங்கத்தலைவர் இன்னும் அநேக தலைவர்கள் அங்கத்தலைவர்களை வேளாளர்களுக்குள்ளாகவாவது ஜாதி வித்தியாசம், குலவித்தியாசம் பாராமல் அந்தந்த உத்தியோகத்திற்கு போய் பாரபக்ஷமில்லாமல் நிர்வகிக்க கூடியவர்களைப்பார்த்து நமது வேளாள சமூகத்தாருடைய ஓட்டு சுதந்தரத்தை கொடுத்து உதவி செய்து நமது வேளாள சமூகத்தையே முன்னுக்குக்கொண்டுவர வேணுமாய் நமது வேளாள சகோதரர்களையும் கடவுளையும் பிரார்த்திக்கிறேன்.

கொ. க, பொன்னம்பலம்.

கொங்கபாளையம்

## கிறிஸ்தவர்களுக்குள்ளுமா ஜாதி வேற்றுமை!

திரு. A. D. சாமி எழுதியது.

அநேக நூற்றாண்டுகளாக நம் இந்திய நாட்டை அடிமைத் தனத்தில் அமிழ்த்த ஓர் சாரரால் செய்யப்பட்ட சூழ்ச்சியின் பயனாக நம் தாய்நாடு அன்னியராட்சிக்கு உட்பட்டிருப்பதுடன் ஜாதி கர்வம் கொண்டவர்கள் பாமர மக்களை வஞ்சித்து வழக்கம், பழக்கம் என்பவைகளால் அவர்களின் இரத்தத்தை உறிஞ்சி, வயிறு புடைக்கத் தின்று திரிகிறார்கள். இவ்வஞ்சகக் கூட்டத்தாரின் ஜபம் பலியா வண்ணம் "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை" என்னும் முது மொழிக்கிணங்க நாம் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் பாகுபாடின்றி ஒன்றுகூடி வைக்கம் வீரர் திரு மிகு ராமசாமி நாயக்கர் அவர்களைப் பின்பற்றி சுயமரியாதைப் போர் புரிந்து வருகிறோம். நம் வீரர்களும் நாளுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும் வெற்றி பெற்று வருவதும் யாரும் மறுக்க முடியாத உண்மை.

இங்ஙனமிருக்க இயேசு கிருஸ்துவால் அருளப்பட்ட 'உன்னை நீ நேசிக்கிறதுபோல் மற்றெல்லோரையும் நேசிப்பாயாக' என்னும் தேவவாக்கை தம் புத்தி விபரம் அறிந்த நாள் முதல் படித்து பாடம் செய்து அதன்படி நடந்து வருவதாகச் சொல்லிக் கொள்ளும் இந்திய கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்குள்ளும் ஜாதி வேற்றுமை உண்டென்று சொன்னால் இதைவிட மானக்கேடானதும் வெட்கக் கேடானதுமான விஷயம் வேறு ஒன்று உண்டோ? தன்னைப் போல மற்றவர்களையும் சிநேகிக்கிறதாக வாயளவில் சொல்லிக் கொண்டு கடவுளை வணங்க ஏற்பட்டிருக்கும் தேவாலயத்திலேயே அவனுக்கு வேறிடம் எனக்கு வேறிடம் என்று பிரித்து வைக்க உரிமை தேடுவோரும் 'நான் கிறிஸ்துவன் (கிறிஸ்துவை பின்பற்றுவோன்.) என்று சொல்லிக்கொள்வது எவ்வளவு மானக்கேடான காரியம்? உயர்ந்தோர் என்போரும் தாழ்ந்தோர் என்போரும் தேவாலயத்தில் உட்காருமிடம் ஒரே சமுனதும் ஒரே மாதிரி தளம் போடப்பட்டதுமாயிருக்க இரு பேருக்கும் நடுவில் ஒரு கிராதிமாத்திரம் இருக்க வேண்டுமாம். அதில்லாவிட்டால் மேற்குலம் கீழ்குலமாய்விடுமாம்! கீழ்குலம் மேல்குலமாய்விடுமாம்! என்னே இவர்களின் அறியாமை!

நிற்க, வழக்கம், பழக்கம், என்னும் மூடக் கொள்கையை அநுசரிப்பவர்களுள் ஒரு வித வேற்றுமையும் இல்லாமல் எல்லோரும் சமம் என்று கிறிஸ்துவைப் பின்பற்றிபோதிக்கும் குருக்கள் இக்கொடிய ஜாதி வேற்றுமை தொலைய ஏதாவது சிறிய மாறுதல் செய்து விட்டாலோ, வந்து விட்டது கோபம் இம்மேல் குலத்தாருக்கு! உடனே, 'ஜாதிபோய் விட்டது' என்று கூக்குரல் எழுப்பி குருக்களுடன் போர் தொடங்கி விடுகிறார்கள். தந்திகளும் விண்ணப்பங்களும் மேலதிகாரிகளுக்கு பறக்க ஆரம்பித்து விடுகின்றன. குருக்கள் என்போர் என் செய்வார்கள் பாவம்! ஏதோ வழக்கம் போல் நடந்துகொள்ளுங்கள் என்று விட்டு விடுகிறார்கள். அவர்கள் இவ்விதம் விட்டு விடக் காரணம் மேற்குலத்தார் என்போர் அதிகத் தொகையினராயும் செல்வவந்தர்களாயுமிருப்பதே.

இது இங்ஙனமிருக்க, அநேகமாயிரம் ஆண்டுகளாக நன்றாய் வேரூன்றி வளர்ந்து வந்த ஜாதி கர்வம் என்னும் மரம்—புத்தர் முதலியவர்களாலும் அசைக்க முடியாத மரம்—கேவலம் அதிகப்படிப்பு முதலானபட்டங்களும், காங்கிரஸ் முதலான போலி தேசிய ஸ்தாபனங்களில் தலைவன் என்ற ஒதா ஏதுவும் பெறாமல் என்றுந் தொண்டனாகவே யிருந்த தன்னலங்கருதாத ஒரு நாயக்கரின் பிரசாரத்தால் ஆணி வேறற்று ஆடிக் கொண்டிருக்க, ஜாதிவேற்றமைக்கு ஆஸ்பதமாயுள்ள இந்துக்களே தங்களுக்குள் ஜாதி வேற்றுமை கூடாதென்று பலத்த கிளர்ச்சி செய்துவரும் இக்காலில், எல்லோரும் சமம் என்று போதிக்கும் இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நம்முள் ஜாதி வேற்றுமையை உண்டாக்குவது சரியா? அவரவர்கள் மனச்சாட்சியைக் கொண்டு சிந்தித்து அதை அறவே நீக்க இன்றே எழுமின்! எழுந்து அதற்காக பிரசாரஞ் செய்ய முன் வாருங்கள். இல்லையேல் நம் சமூகம் முன்னேற்றமடையா தென்பது மட்டும் திண்ணம்! திண்ணம்!! முக்காலும் திண்ணம் !!!

## திருச்சியில் மாபெருங்கூட்டம்.

திருச்சியில் டவுன் ஹாலுக்கருகில் மேற்படி கூட்டம் வெற்றியாகவும் விமரிசையாகவும் நடைபெற்றது. 3000 பேர் கூடியிருந்தனர் கண்ணப்பர் தலைமை வகித்தார். திரு அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள், தண்டபாணி பிள்ளை, ஜே. என். ராமனுதன் மூவரும் பேசினர். நன்றி கூறி மாலையிடப்பட்டு இரவு 9-45 மணிக்கு கூட்டம் கலைந்தது.

நமது நிருபர்.

## பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்.

விபவ வருஷம் வைகாசித்திங்கள் 10 வது நாள் (20-5-28) புதவாரம் காலை சென்னை சூளை அவதானம் பாப்பையர் வீதி 101 வது இல்லத்தில், சூளை ஜீவரட்சக சபை பிரசாரகரும், தேசீயத் தொண்டரும், சமுதாய சீர்திருத்தக்காரரும், விருது நகர், திரு சிவராமபிள்ளை குமாரருமான திரு தியாகராஜ பிள்ளைக்கும், திருக்காட்டுப் பள்ளி திரு வேலாயுதம் பிள்ளை குமாரத்தி திரு நாகரத்தினம் அம்மாளுக்கும் பார்ப்பனப்புரோகிதமில்லாமல் திருமணம் நடந்தேறியது. அன்று மாலை புல்லாங்குழல் தேசீயக்கீதம் கச்சேரிகள் நடந்தேறின. காலைமாலை யிருவேளைகளிலும் வந்திருந்த மேதாவிகள், நண்பர்கள் முதலியவர்களில் திரு கணபதியானந்த சுவாமிகள், சூளை பகுதி கார்ப்பொரேஷன் கவுன்சிலர் திரு வி. முனுசாமி நாயுடு, திரு சிங்காரவேலு செட்டியார் பி. எ. பி. எல். திராவிடன் பத்திராதிபர் திரு. கண்ணப்பர் திரு யம் தண்டபாணிப்பிள்ளை முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதர பல நண்பர்களும், பெரியோர்களும் பக்தர்களும் அநேக வாழ்த்துக் கடிதங்களும் தந்திகளும் அனுப்பியுள்ளார் பல சமுதாயங்களிடையிலிருந்து வரும் ஆசீர்வாதம் (வட்டியில்லா கடன்) என்று தரப்படுவதை ஏற்றுக் கொள்வதில்லை யென்றும் அதற்காக மன்னிக்கும் படியும் மணமகன் எல்லோரையும் கேட்டுக் கொண்டும் அநேகர் அவரது வேண்டுகோளை ஒப்புக் கொள்ளப்பிரியமில்லாதவர்களாய் வலுவில் வந்து வெள்ளிப் பாத்திரங்களும், பொன் வெள்ளி நாணயங்களும் ஸ்ரீ பகவத் கீதை முதலிய புத்தகங்களும் ஆசீர் வதித்ததைக் குறித்துக் கொள்ள மணமகன் மறுத்தது குறிப்பிடத்தக்கது. இது பார்ப்பனர்களிடையே யிருக்கும் வரதட்சனை யென்னும் கொடிய வழக்கத்துக் கொப்பானதால் இதையும் நம்மவர்கள் ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எ. சம்மர்தம்.

### சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.





ஜீவாம்ருதம்.

வைத்யரத்ன பண்டிட் கோபாலாச்சார்லு அவர்களால் சிறந்த மூலிகைகளினின்றும் கண்டு பிடிக்கப்பட்டு கால் நூற்றாண்டுகளாக உலகில் நிலவி வருவது. ஆரோக்கியம், தேஜஸ், வீரியம், பலம் முதலியவைகளைத் தன்னுள்ளடக்கிய தேவாம்ருத புட்டி என்பது மிகையா! மெலிந்த தேகிகளுக்கும், நோயாளிகளுக்கும் இது உண்மையில் ஒரு வரப்பிரசாதந்தான்.

இன்றே ஒரு புட்டிக்கு ஆர்டர் செய்து பாருங்கள்.

விலை ரூ. 3—4—0.

ஆயுர்வேதாஸ்ரமம்.

151 கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
தபாற் பெட்டி 287, சென்னை.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் வேறுயாதாவது உண்டா என்பதை யோசியுங்கள்.

கடவுள்.

ஒருவரிருந்தால் அவர் எல்லோருக்கும் சமமாகத்தான் இருக்கவேண்டும். சூத்திரர்களாகிய நீங்கள் கடவுளைப் பூசித்தால், அல்லது தொட்டால், கடவுள் ஓடிவிடுவாரென்று பார்ப்பனர்கள் சொல்லுவதுபோல் நீங்களும் சொல்லுகிறீர்கள். நீங்கள் பூசித்தால் ஓட்டம் பிடிக்கும் கடவுள்கள் உங்களுக்கு என்ன நன்மையைச் செய்யமுடியும்? இத்தகைய கடவுள்களுக்காக வங்காலத்து வாங்கிக்கொண்டு, கடவுள் அருகில் போக உரிமையற்ற நீங்கள், "கடவுள் போச்சு" என்று சொல்லும் உரிமை பெற்றிருப்பதின், ரகசியம் என்ன, என்பதை நீங்களே சிந்தியுங்கள்.

நாஸ்திகம்.

நாஸ்தி-என்ருல், இல்லை என்று பொருள். 'குடி அரசு' கூறும் ஞாயங்கட்கு தக்க சமாதனங்கள் கூற வழியின்றி கடைசி கையிருப்பாகிய "நாஸ்திகம்" என்ற பதத்தை உபயோகிக்கின்றீர்கள். கடவுள் இல்லையென்று, 'குடி அரசு' கூறினது உண்டா? நீங்கள் கூறும் நாஸ்திகம் என்ற பதத்திற்கு, நீங்களே உரித்தானவர்கள். எங்ஙனமெனின், நாஸ்தி, என்ருல் இல்லை. என்ன இல்லை? மதவிஷயங்களில் சூத்திரர்களாகிய உங்களுக்கு எவ்வித உரிமையும் "இல்லை" ஆகையால் நீங்கள் கூறும் நாஸ்திகம் உங்களுக்கே பொருத்தமாகவில்லையா? என்று யோசியுங்கள். ஆகவே உண்மையை உணராமல் வீணுக, 'குடி அரசின்' பிரசாரத்தை, குறை கூறுவது உங்களுக்கு தர்மமாகுமா?

## சட்ரவல லேகியம். (சட்னி)

இவை அநேக விதமான மூலிகைகளினுலும், காபூல் திராக்ஷ ரசத்தினுலும் தயாரிக்கப்பட்டது குணம்:—மலபந்தம், அஜீர்ணம், வாய்வு நோய், வயிற்று வலி முதலிய வியாதிகள் நிவர்த்தியாகும். சாப்பிடும் முறை:— சுடுகிற சாதத்தில் அரை தொலம் இந்த லேகியத்தை நெய் போட்டுக்கொண்டு சாப்பிடவும்.

டின் ஒன்றுக்கு கிரயம் ரூ. 0—8—0.

## ரத்தன் மிஸரி அல்வா.

நீரான இந்திரியத்தை கெட்டி செய்யும். தாது விருத்தியாகும்; ஸ்திரீ சம்போகம் சுகங்கொடுக்கும். சொர்பன ஸ்கலிதம், மூத்திரத்தில் பொட்டு பொட்டாய் வீரியம் போகிறது, ஸ்திரியைக் கண்டவுடன் வீரியம் ஸ்கலிதமாய் சம்போகத்தின்பேரில் பிரியம் இல்லாமல் போகிறது, துர் அப்பியாசத்தினுல் பும்ஸத்துவம் இல்லாமல் இருக்கிறது ஆகிய அநேக விதமான மேக வியாதிகள் முதலானவைகளைப் போக்கடித்துவிடும்.

கிரயம் டின் ஒன்றுக்கு ரூ. 2—8—0.

மேல்கண்ட மருந்துகள் ஈரோடு, கோயமுத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், கிருஷ்ணகிரி, திருப்பூர், தருமபுரி இந்த இடங்களில் கிடைக்கும்.

ஆஞ்சநேய ஜோதிஷாலயம்,
கோர்த்து பேட்டை,
பெங்களூர் சிட்டி.

விபவ வருஷம் வைகாசி மாதம் 15-ஆம் தேதியில்
இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டை தாலூகா சுக்கில நத்தம்
கிராமத்தில் வடக்கு வீட்டு முதலாளி சுயமரியாதை வீரர்

## துரைசாமி ரெட்டியார் என்ற சுப்பா ரெட்டியார்

அவர்கள் திருமாளிகையில்

## வைக்கம் வீரர் உயர்திரு. ஈ. வெ. ராமசாமிநாயக்கர்

அவர்கள் நடத்தி வைத்த மூன்று சுயமரியாதைத் திருமணங்களின்

மணமக்களுக்கு,

# மங்கள வாழ்த்து.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்,

விபவ முறுமனகேசன் அனைய பெருந்திருவாளன் விரிபூங்காவில்
நபமுகில்கள் மிசைதவழுமகிமைகொள் சுக்கிலநத்த நகராள் வேந்தன்
இபமனைய காப்பிரன் எளியர் தமக்குபகாரன் இரெட்டி கோத்ரச்
சுபசுகுணன் துரைசாமி சுப்பைய பூபதி திண்டார் துபம் தீர்த்தோன் 1

பார்ப்பனர் தம் சூழ்ச்சிதனை அறிந்தவரைபொழித்தவர் சொல் பலசடங்கும்
ஏய்ப்பெனவே யகற்றி யேழையர்க்குதவி புரிதலே யீசற்கியும்
மாப்பெரும் பூசனை யெனவவ்வாறு ...... வருநாள் நல்வாத்தாற் பெற்ற
கோட்புதல்வன் குமரனிகர் ஆரங்கசாமி ...... கொள் குரிசிற்சேய்ந்த 2

செல்விகளாம் ...கம்மை இரத்தினத்தம்மை யெனும் திருவேயன்ன
நல்விவேகியரை மணம்புரிந்தருள்வான் வேண்டி நங்கள் வைக்கம்வீரன்
பல்வளஞ்சேர் ஈரோடு ராமசாமிப் பெருமான் தண்டபாணி
சொல்வளஞ்சேர் கண்ணப்பரெனு மூன்று மூர்த்தியரைத் துணைவரோடும் 3

வாவழைத்து விபவ வைகாசியிற் பதினைந்தா நாள் மங்கள கீதங்கள்
விரிவுறச்சிங்கார மணப்பந்தலிலே மணமக்கள் வேலோன் வள்ளி
சுரபதி தன் புதல்வியென வீற்றிருப்பச்சுற்றத்தார் சூழ்ந்துமேவ
அரிமுகுந்தனை வைக்கம் வீராமப் பெருமான் ஆசானுக 4

அமிழ்த நிகர் தமிழ் முறையாலுயர் மணத்தை அகிலமெலாம் அதிசயிப்ப
விமரிசையாய்ப் புரிந்தருள் செய்தான் ஆவல் சூரனகர் மேவும் வேந்தன்
கமழ்மலர்த்தாரணி புயத்தான் கோபாலசாமியுயர் கமலத்தம்மை
குமுதவிதழ்ச் சிரோமணியாமம்மை யெனும் மணமக்கள் குலவிவாழ 5

மிக்கபுகழ் மாரிரெட்டியாரென்னும் சுப்பையவேளுடனெண் சீதா
லக்குமிப்பேர் மணமகளும் மருவிவாழ்வுற நவில்முன் முறையின் வண்ணம்
தக்க விரு மணங்களையம் மணப்பந்தல் தனிற்புரிந்து தயவு கூர்ந்தான்
வைக்கம் வீரபெருமானெனும் ராமசாமிகுரு மகிபன்றனே 6

தினர்தந்த யானுவைக்கம் வீரனுயர் அவதாரன் செழித்து வாழ்க
ஞானமிகு கண்ணப்பர் தண்டபாணியை முதலோர் நன்ருய் வாழ்க
மாநலஞ்சேர் சுயமரியாதைத் திறங்கொள் மணமக்கள் மகிழ்ந்து வாழ்க
மாணங்காத்தாண்ட துரைசாமி சுப்பையேந்திரனென்றும் வாழ்கமாதோ 7

தி. அ. வே.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூருகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு $3\frac{1}{2}$x $2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்.

## வீர சைவ சேணியர்களுக்கோர் வேண்டுகோள்.

கனவான்களே!

விபவ-ஞூ வைகாசி-மீ 11-தேதியில் இராசிபுரம் திரு. ம. சு. செங்கோட செட்டியாருக்கும் சௌபாக்யவதி சுப்பம்மாளுக்கும். 13-ம் தேதியில் திரு. க. ஆ. சுப்பிரமணிய செட்டியாருக்கும் சௌபாக்கியவதி மீனுலக்ஷிம்மாள் என்கின்ற கன்னிகைக்கும் பார்ப்பனீய மொழிந்த திருமணங்கள் வெகு விமரிசையாய் நடந்தேறின. அம்முகூர்த்தத்தில் நம்ஜாதி திரு க. ஆ. முத்தையா செட்டியாரால் புரோகித சடங்கு கிரமமாய் நிறைவேறிற்று. இதுபோல் மற்றுமுள்ள சடங்குகளெல்லாம் பார்ப்பனரில்லாமலேயே செய்துகொள்வதாக பேசிக்கொள்ளுகிறார்கள். ஆகலால் பல தேசங்களிலுமுள்ள சேணிய வம்சத்தார்களெல்லோரும் இதேபோல் நடந்துகொள்ளுவார்கள் என்பதாகக் கேட்டுக்கொள்வதோடு நம் ஜாதி முன்னேற்றத்தைக் கருதி ஆங்காங்கு வாசகசாலைகளை யமைத்து நம்பாலர்களை கல்விப் பயிற்சியில் முன்னேற்றுவீர்களென்றும் இத்தனை நாள் தூங்கிக்கொண்டிருந்தது போலில்லாமல் தூக்கத்தை விட்டுவிட்டு நம் முன்னே[ற்றத்]தை கருதவேண்டுமென்றும் பெரியோர்க[ளை] வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் இத்தனை காலமாக சுயமரியாதையை கைக் கொள்ளாமலிருந்ததற்குக் காரணம் 'குடி அரசு' போன்ற பேபர்களை வாசிக்காமலிருந்ததேயாகும். மிற்க, பதினாயிரக் கணக்கான ஜனத்திரள் கூடிய நம்முத்தவியால் பல பேர்கள் பலவிதத்தால் பிழைத்து வருவதென்பது தெரிந்ததே. உழைப்புக்குமாத்திரம் நாம் சாரணமே யொழிய பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டோமில்லை, இப்படியே இன்னும் சிறிது காலம் சென்றால் பலருக்கும் அடிபணிந்து நாம் நடக்க வேண்டிவருவது திண்ணம். ஆகையினால் சுயமரியாதைச் சூரியனுதித்து அறிவுச்சுடர் கொளுத்தும் இச்சமயத்திலும் நாம் தூங்கிக்கொண்டேயிருந்தால் பிறர் நம்மைக்கண்டு நகைக்க நேரிடுமென்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இராசை, R K. இரங்கசாமி செட்டியார்.

## அருப்புக்கோட்டையில். சுயமரியாதைத் திருமணங்கள்

இவ்வூர் பிரபல குடும்பத்தாராகிய ஸ்ரீமான் பெருமாள் நாயுடு அவர்கள்பேரனை உபாத்தியாயர் வரதராஜுலு நாயுடு அவர்களுக்கும் வையூர் திரு. வீரய நாயுடு குமாரர் குருசாமி நாயுடு அவர்களுக்கும் மதுரை நரசிம்மலு நாயுடு சகோதரர் ராமசாமி நாயுடு அவர்களுக்கும் ஆக மூன்று திருமணங்களும் விபவ-ஞூ வைகாசி-மீ 18-ௌ வியாழக்கிழமை (31-5-23)ல் சுயமரியாதைத் தொண்டரான போடம்பட்டி திரு. தி. கருப்பையா பிள்ளையவர்களைக்கொண்டு சுயமரியாதை முறையில் சிறப்பாக நடத்தப்பட்டன. அதற்கு பிரபல உத்தியோகஸ்தர்களும் வர்த்தகர்களும் மிராஸ்தார்களும் திரளாக விஜயம் செய்து திருமணத்தைச் சிறப்பித்தார்கள்.

'சுக்கிலவாரத்தத்தில் மூன்று சுயமரியாதைத்திருமணம். அருப்புக்கோட்டையில் மூன்று சுயமரியாதைத் திருமணம்' என்று சந்தோஷமாக வார்த்தையாடி அறுசுவைப் போஜனம் அருந்தி சந்தனதாம்பூலம் பெற்று வைக்கம் வீரருக்கு ஜே! சுயமரியாதை சங்கத்திற்கு ஜே! என்ற கம்பீரத் தொனியுடன் தத்தம் இல்லமேகினர்.

சி. ராஜகோபால் நாயுடு.


## சுவாச காச ரோகத்திற்கு

ஆஸ்த்மா சிகிச்சைக்கு அரசனுகிய கபரோக நிவாரணி என்னும்

## ஆஸ்த்மா பௌடர்.

கொடிய சுவாசகாச ரோகத்தினின்று தப்பித்துக்கொள்ள விரும்புவோர் இதை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள். கபத்துக்கு இது ஒரு சத்ரு. நிமிஷக் கணக்கில் தொந்திரவை நீக்குகிறது.

வைத்திய சிரோன்மணிகளால் அங்கீகரிக்கப்பட்டது. சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காகரப்பு, எரிச்சல், புண், வலி முதலிய சகல கஷ்டங்களையும் இந்த ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்து கெட்டியான கபத்தை இளகச் செய்து கபத்தை வெளியில் தள்ளி கஷ்டமில்லாமல் எப்பொழுதும்போல் சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், பசிதீபனமுண்டாக்கி ஆவலுடன் அதிக ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரைசெய்யும்படியாயும் செய்கிறது தவிர, இம்மருந்து சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், நாசியில் நீர்வடிதல், விஷஜுரம், திரேகம் மெலிதல், முகம் வெளுத்தல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளுக்கு மிகவும் மேலான மருந்தாயும், நிமிஷக்கணக்கில் அதிக ஆச்சர்யத்துடன் நிவர்த்திசெய்யத் தக்கதாயுமிருக்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடிய டிப்பா 1-க்கு விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு. புரோப்ரைட்டர், பூ மா. சோக்கலிங்க முதலியார்,

திருநாவுக்கரசு வைத்தியசாலை,

அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)



## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ணா எஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.



## அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால் தயார் செய்த அருணக்கொடி நிறுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டையடித்த செயின், ஒட்டியாணம், காப்பு, கடகம், மயிர்மாட்டி, பீலி, அருப்பு சங்கிலி, சாவி சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கம் வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்குக் கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்.

S. K. மாணிக்கம் செட்டி,

தங்கப், பவுன், வெள்ளி

நகைகள் வியாபாரம்,

செவ்வாய்ப்பேட்டை

சேலம்.



## கணித சோதிடம்

பரகிர கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னதென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக ககலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,

முதலியார் பேட்டை, புதுச்சேரி


பார்ப்பானுக்குக் கொடுத்தால்தான் பரகதி அடையமுடியுமோ?

5-ம் பக்கத் தொடர்ச்சி.

தளர்ச்சியடையாத கிளர்ச்சியாலும் கல்விப்பயிற்சியாலும் தான் ஒருவர் விரும்பிய முடிவை அடைய முடியும்.

வரிசை கொடுக்கும் முறையானது பிராமணர்களுக்குள் மாத்திரம் பரவி இருந்தது. சமீப காலத்திலிருந்து பார்ப்பனரல்லாதார் வகுப்பிலும் அது நுழைந்து விட்டது. இது நமது மக்கள், பிறருடைய நல்ல வழக்கங்களைக் கொள்ளாமல் கெட்ட வழக்கங்களை ஏற்றுக் கொள்ளுபவர்களாயிருக்கும் நோக்கத்தைக் காட்டுகிறது. பணத்திற்காகவும் பணத்திற்கு மாத்திரமாகவும் பெண்களை மணம்புரிய விரும்புகிற கல்வி கற்ற பார்ப்பனரல்லாத இளைஞர்களைப்பார்க்க எனக்கு ஒழுக்க வழுவாகத் தெரிகிறது. பெண்மக்களை அடிமைகளாக வைத்திருப்பதற்கு மக்கள் வற்புறுத்துகிற நொண்டி நியாயம் அவர்கள் தங்கள் ஜீவனத்திற்குச் சம்பாதித்துக் கொள்ள சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள் என்பதும், அவர்கள் குடும்பத்தில் சம்பாதிக்கிறவர்களை எதிர் பார்த்தவர்களாயிருக்கிறார்கள் என்பதும் தான். திருமணத்திற்கு முன்னதாக பணப்பேரம் பேசுவதை ஒரு நிபந்தனையாகக் கொண்டிருக்கிற கல்விகற்ற இளைஞர்களைச் சமூக வாழ்வில் காண்பது அவமானமாயிருக்கிறது. சீமான்களே! இவர்கள் மனக்குஷ்டரோகிகள்! இவர்கள் உடற்குட்டம் பிடித்தவர்களை விடக் கேவலமாக வைத்தியம் செய்யப்பட வேண்டும்.

எனக்குஇருக்கிற கால அளவு கொஞ்சமாயிருந்ததால் சமூக சீர் திருத்தத்தைப்பற்றிய எனது பரிசீலனையில் மிக்க விரிவாக எல்லாவற்றையும் சொல்லிவிட்டதாக நான் பாராட்டவுமில்லை. அல்லது உங்கள் கவனிப்புக்குவேண்டிய எல்லாத் துறைகளையும் பற்றி நான் சொல்லவுமில்லை.

## சைமன் கமிஷன்.

நான் எனது சொற்பெருக்கை முடித்துவிடுமுன்னர் தற்கால அரசியல் நிலைமையைப்பற்றி ஏதாவது சொல்லுவேன் என்று நீங்கள் எதிர்பார்த்திருப்பீர்கள் என நான எண்ணினேன். தேசத்தின் மனப்பான்மையை கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிற ஒரு விஷயம் சைமன் கமிஷனும் அதனுடைய விசாரணையும்தான். ஒரு காலத்தில் அரசியல் கட்சிக்காரர்களில் அநேக கட்சியார்கள் சைமன் கமிஷன் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே வரவேண்டும் என்று கேட்டார்கள். இப்பொழுது அது நியமிக்கப்பட்டது. அதில் இந்தியர்கள் நியமிக்கப்படவில்லை என்ற காரணத்தைக்கொண்டு சிலர் ஒத்துழைக்க மறுக்கிறார்கள்.

மிதவாத அரசியல வாதிகள்கூட அதற்கு விரோதமாக காணப்படுகிறார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் கமிஷனைப் பற்றி நினைக்கவும் விரும்பமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் இந்தியாவுக்குப் பூரணசுதந்தரத்திற்குக் குறைவாக ஒன்றும் வேண்டார்கள். அவர்கள் இந்தியாவிக்கு இப்பொழுதே 'குடி யரசு' நிலவந்துவிட வேண்டுமென்றார்கள். இந்தியா பிரிட்டனோடு செய்யவேண்டியது ஒன்றுமிருக்கக் கூடாது எனறும் வேண்டுகிறார்கள். இந்தவகை அரசியல் கட்சிக்காரர்களோடு ஒருவர் ஒத்துக் கொள்ளாவிட்டாலும் அவர்கள் கொள்கையை ஒருவர் அறிந்து கொள்ளமுடியும். முதலிலேயே கமிஷன் வேண்டுமென்று கேட்ட மற்ற கட்சிக்காரர்களுடைய தற்கால நிலைமையைத்தான் நான் அறியக்கூடாததாய் இருக்கிறது. அரசியல் கூட்டத்தார்களும் தனிப்பட்ட மக்களும் தங்களுக்கு இஷ்டமிருந்தால் தங்கள் விஷயங்களை கமிஷன் முன்பாக சொல்லிக் கொள்ளும்படி கமிஷனர்கள் கேட்கிறார்கள்.

## வித்தியாசங்கள் ஒழிய வேண்டும். டாக்டர் பரஞ்சபே அபிப்பிராயம் மேனாட்டுக் கொள்கையை பின்பற்ற வேண்டும்.

இந்திய மெஜ்லிஸ் கூட்டத்தில் டாக்டர் பாஞ்சபே தலைமை வகித்துப் பேசுகையில் இந்தியர்கள் மதத்தைப் பிரதானமாகக்கருதி சண்டைச்சச்சரவுகள் போட்டு வருவதை ஒழிக்கவேண்டுமென்றும் இவ்விஷயத்தில் மேனாட்டினர் கொள்கைகளை பின்பற்றினால் கூடிய சீக்கிரத்தில் இந்தியா விடுதலையடைய வழி ஏற்படுமென்றும் உதாரணமாக துருக்கி கிலாபத்தை உதறித் தள்ளியதால் முன்னேற்றமடைந்த தென்றும், ஜப்பான், ருஷியா, மெக்சிகோ முதலிய தேசங்கள் மதத் தொல்லைகளை ஒழிக்கப்போர் செய்து சுயேச்சை நாடுகளாக விளங்குவது பிரத்தியட்சமான அத்தாட்சியென்றும் ஆகையினால் ஜாதி மதங்களை விலக்கி வைத்து சுதந்திரப் போர்செய்து இந்திய முன்னேற்றத்திற்கு முக்கியகாகப் பாடு பட்டு வரவேண்டுமென்றம் சொன்னார்.

---

சைமன் கமிஷனானது பிரிட்டிஷ்பார்லிமெண்டாரால் அமைக்கப்பெற்ற ஒரு ஏஜண்டாக இருந்து சீர் திருத்தச்சட்டத்தை கையாளுவதைப் பற்றி விசாரித்து பார்லிமெண்டுக்குத் தெரிவிப்பதற்காக இருப்பதால் கமிஷனோடு ஒத்துழைப்பதும் ஒத்துழையாமையும் ஒரு கேள்வியல்ல. கடைசியில் இந்தியாவுக்கு இன்னும் அதிகமான சீர் திருத்தங்கள் வழங்கலாமா கூடாதா என்று முடிவு செய்யவேண்டியது பார்லிமெண்டுதான். தனி இங்லீஷ் கமிஷன் முன்பாக சாட்சியம் கொடுப்பது ஒருவருடைய சுயமரியாதைக்குக் குறைவானது என்று சொன்னால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அரசரையும் இந்தியா கவர்ன்மெண்டையும் ஒத்துக்கொள்வது சுயமரியாதைக்கு இன்னும் அதிகக் குறைவானதாகும். சாட்சியம் கொடுக்கமறுப்பது உண்மையாயிருப்பதைவிட ஒரு விசித்திர உணர்ச்சியாயிருப்பது தெளிவாயிருக்கிறது:

எப்படியிருந்தாலும் ஒரு தேசத்தாருடைய உணர்ச்சியானது அவர்களுடைய சுயமரியாதைக்குக் குறைவாக அலட்சியம் செய்யக்கூடாததாகும். ஏனென்றால் முக்கியமான காரியங்களிலும் சிறிய விஷயங்களிலும் மனிதர்கள் உணர்ச்சியினால் பெரும்பாலும் நடத்தப்பெறுகிறார்கள். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் எப்படியாவது தேசத்தாருடைய உணர்ச்சியை திருப்திசெய்துவிட்டுக்கொடுத்தால் அரசியல் கட்சியர்களில் அநேகர் இப்போது வசித்திருக்கிற தனியாக விலகியுள்ள நிலைமையிலிருந்து மாற்றிக்கொள்ள எண்ணுவார்கள். கடைசியாக அதிகமாக சீர் திருத்தம் வழங்கும் கேள்வியை முடிவுசெய்ய எடுத்துக்கொள்ளும் பொழுது பிரிட்டிஷ் பார்லிமெண்டார் எவ்வளவு தூரம் நன்மைசெய்வார்கள் என்பதுதான் கவனிக்கவேண்டியது. அது முடிவானபிறகு நாம் கவர்ன்மெண்டை பகிஷ்காரம் செய்யவேண்டுமா அல்லது அதனோடு ஒத்துழைக்கவேண்டுமா என்பதைப்பற்றி முடிவுசெய்யமேக்குப் போதுமான கால அளவு இருக்கும். இதன் மத்தியில் இந்தியா மந்திரியானவர் தேசத்தாருடைய உணர்ச்சியைச் சமாதானப் படுத்த என்ன செய்யப் போகிறார் என்பதை நாம் காத்திருந்து பார்ப்போம்.

முடிவாக நீங்கள் உங்களுடைய மகா நாட்டிற்குத் தலைமை வகிக்க என்னை வரவழைத்ததற்காக மற்றொருமுறை வந்தனமளிப்பதோடு என் சொற்பெருக்கைப் பொறுமையோடு காது கொடுத்துக் கேட்டதற்காகவும் வந்தனமளிக்கிறேன்.

---

## மேலூரில் சுயமரியாதைத் திருமண விழா.

10—6—28 ஞாயிற்றுக்கிழமை காலை மதுரை ஜில்லாவைச் சேர்ந்த மேலூர் தாலூகா கஸ்பா மேலூரில் முதன் முதலாக பார்ப்பனப் புரோகிதத்தை அறவே நீக்கி பார்ப்பனரல்லாத பெரியோர் ஸ்ரீமான் ரங்கசாமி நாயுடு அவர்களால் மேலூர் ஸ்ரீமான் முத்துசாமி நாயுடுவின் குமாரன் திரு வெங்கிடசாமி நாயுடுவுக்கும், காரைக்குடி ஸ்ரீமான் குமாரசாமிநாயுடு அவர்கள் திருச்செல்வி பாட்புத்தாய் அம்மாளுக்கும் திருமணம் வெகு விமரிசையாய் நடத்திவைக்கப்பட்டது. அச்சமயம் சுயமரியாதை வீரர்களும் "குடி அரசு" 'திராவிடன்' வாசகர்களும் வந்திருந்து மேற்படி திருமணத்தை நடத்தி வைத்தார்கள். அவ்வமயம் ஸ்ரீமான்கள் சுப்பிரமணியப்பிள்ளை சப்ரிஜிஸ்தரார், சங்கர நாராயணசாமி பிள்ளை பாங்க் காரியதரிசி, ராமய்யா பிள்ளை ஐக்கிய சங்கம் இன்ஸ்பெக்டர், விவசாய இலாகா டிமான்ஸ்ட்ரேட்டர் பத்மனுப நாயுடு, தாலுகா ஆபீஸ் எட் மாணிக்கம் பிள்ளை, சுப்பா நாயுடு, கிருஷ்ணசாமி நாயுடு; குருசாமி நாயுடு, குப்புசாமிப்பிள்ளை, நாராயண சிங் ஆகியவர்களும் இன்னும் அதிகாரிகளும் காரைக்குடி, மதுரையிலிருந்து பிரபல வியாபாரிகளும் வந்திருந்தார்கள்.

பெரியோர்களின் கட்டளைப்படி ஸ்ரீமான் பத்மனுபநாயுடு அவர்கள் தம்பதிகளை ஆசிர்வதிக்கும்பொழுது மணமகனுக்கும் மணமகளுக்கும் மற்றும் கூடியிருந்தவர்களுக்கும் தெளிவாக மணத்தின் கருத்தையும் தம்பதிகள் தங்கள் வாழ்நாளில் இல்லறத்தை நடத்தவேண்டிய விதிகளையும் சுருக்கமாகச் சொல்லி வாழ்த்தினார். பிறகு சந்தனம் தாம்பூலம் புஷ்பம் முதலியவைகள் வழங்கப்பட்டன. இந்நகரில் முதல் முதலாக இம்மாதிரி மணத்தை நடத்திவைத்த திரு. ரா. சுப. ராமசாமி நாயுடுவைப் போற்றுவதோடு இதற்கு உதவியாயிருந்து நடத்தி வைத்த பழக்கடை சுயமரியாதை வீரர் முத்துநாயுடு அவர்கள் சிரமம் மிகவும் பாராட்டத்தக்கது. எங்கும் அதிக கிளர்ச்சி உண்டாகி இருக்கிறது. மங்களம், சுயமரியாதைக்கு ஜே? —— ஒரு நிருபர்.

## கோலார் தங்கவயல் உரிகம். நந்தமிழ் குலமித்திர குமரன் சங்கம்

'28—5—28 திங்கட்கிழமை மாலை 6-45 மணிக்கு ஸ்ரீமத் மதுரைமுத்து அவர்களின் தலைமையின்கீழ் ஸ்ரீமத் டி. விஜயரங்கம் அவர்கள் கழகத்தின் வரவேற்பு பத்திரம் வாசித்ததின் பின்பு திரு இரத்தினசாமி அவர்கள் 'கல்வி' என்ற விஷயத்தைப்பற்றியும், எம். டி. கிருஷ்ணசாமியவர்கள் 'பிறவிபலன்' என்ற விஷயத்தைப் பற்றியும், திரு.பி. ஆறுமுகம் அவர்கள் 'சுயமரியாதை' என்பதைப்பற்றியும் அரியவிரிவுரை நிகழ்த்தினார்கள்.

இறுதியாக திரு கே எ ஈ சிங்காரம் அவர்கள் 'சங்கத்தின் முக்கிய நோக்கமும் அதன் சொல்லும்' என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார். வந்தனோபசாரத்துடன் இனிது கூட்டம் கலைந்தது. பி ஆறுமுகம், காரியவமைச்சர்,

## மதுரை தமிழ்நாடக நடிகர் சீர்திருத்த மன்றம்

மேற்கண்ட சங்கமானது 7-6-28 ௳ இரவு வள்ளி, சத்தியவான், என்னும் நாடகத்தை நடித்துக் காட்டிற்று. அவ்வமயம் தமிழ் நாடக உலகத்தில் தமிழ்நாடகம் சீர் கேடுற்று இருப்பதைக் குறித்து நம் வீரர் பட்டுக் கோட்டை அழகர்சாமி நாயுடுகாரு மிக அழகான தொரு பிரசங்கம் செய்தார். அருணசலம்.

மே மாதம் 26, 27-ம் தேதிகளில் மதுரையில் நடைபெற்ற

மதுரை இராமநாதபுரம் ஜில்லா

# பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாட்டில்

## நிறைவேறிய தீர்மானங்களின் தொடர்ச்சி.

27. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மகமதியர்களையும், கிருஸ்தவர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று இம்மகாநாடு டிரஸ்டிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

திரு. கண்ணப்பர் அவர்கள் பிரேரேபிக்க திரு. உத்தண்ட நாடார் அவர்கள் ஆமோதிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

28. இம்மாநாடு எல்லா பிராமணரல்லாதார்களையும் வாலிபர் சங்கங்களில் சேரும்படி கேட்டுக் கொள்வதுடன் ஷை பிராமணரல்லாத வாலிபர் சங்கத்திற்காக ஓர் சாசுவத நிலையம் ஏற்படுத்துவதற்காக நம் பொது மக்களை தாராளமாய் பொருளுதவி செய்யும்படிக்கும் கேட்டுக் கொள்ளுகிறது.

அவைத் தலைவர் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

29. குடும்ப சொத்தில் பெண்களுக்கும் சரிபாகம் கொடுக்க வேண்டுவது அவசியமென்றும், அதற்கு ஏற்ற சட்டம் இந்தியா சட்டசபையின் மூலம் சட்டங்களில் திருத்தம் செய்யவேண்டுமென்றும் இந்தியா சட்டசபையின் பிரதிநிதிகளை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

அவைத் தலைவர் அவர்கள் பிரரேபிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

30. இட வித்தியாசம் கற்பிக்கின்ற காப்பி, சாப்பாட்டு ஓட்டல் முதலியவைகளுக்கு முனிசிபல் சேர்மேன் முதலிய அதிகாரிகள் லைசென்ஸ் கொடுக்கப்படாது என்று இம்மகாநாடு அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறது.

அவைத்தலைவர் அவர்கள் பிரரேபிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

31. ரெயில்வேக்களில் இந்துப் பிரயாணிகளுக்கு என்று ஏற்படுத்தப்பட்ட உண்டிச்சாலைகளில் இடவித்தியாசம் ஏற்படுத்த இடங்கொடுப்பது ஒரு வகுப்பாரைத்தவிர மற்ற வகுப்பாருக்கு மனக்கொதிப்பைக் கொடுக்கின்றதென்றும் வெறுப்பதோடு இனி இதை அடியோடு ஒழித்துவிடவேணுமாயும் இம்மகாநாடு தெரிவித்துக் கொள்ளுகிறது.

அவைத்தலைவர் பிரேரேபிக்க திரு. வி. ஒ சிதம்பரபிள்ளை அவர்கள் ஆமோதித்துப் பேச திரு. ஆரியா அவர்கள் ஆதரித்துப் பேச ஏகமனதாய் நிறைவேறியது.

32. முனிசிபாலிட்டி மருத்துவ பாடசாலைக்குப் பரிட்சை முதலானவைகளை நடத்தி தேர்ந்தவர்களுக்கு நற்சாக்ஷிப் பத்திரமளிக்க வேண்டுமென்றும் சென்னையில் தமிழ் வைத்திய பாடசாலை ஏற்படுத்தியதுபோல மதுரையம்பதியிலும் ஓர் தமிழ் வைத்திய பாடசாலை ஏற்படுத்த வேண்டுமென்றும் பொது ஸ்தாபனங்களில் பொது நலங்கருதும் மருத்துவகுல அங்கத்தினர்கட்கு டிஸ்டிரிக்ட் போர்டு, தாலூகா போர்டு முதலிய கழகங்களில் ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. திரு எம், எஸ். சுப்பிரமணியம் அவர்கள் பிரேரேபிக்க திரு. எஸ். இராமச்சந்திரம் சேர்வை அவர்கள் ஆமோதிக்க ஏகமனதாய் நிறை வேறியது.

33. இம்மகாநாடு ; கவர்ன்மெண்டை ஜாதி வகுப்பு சம்பந்தமாக ஏற்படும் சச்சரவுகளை விசாரிப்பதற்குத் தனியாக அதிகாரிகளையும் மாஜிஸ்டிரேட்டுகளையும் நியமிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறது. திரு. டி. நாராயணபிள்ளை அவர்கள் பிரரேபிக்க திரு. எஸ் இராமச்சந்திரன் சேர்வை ஆமோதிக்க ஏகமனதாக நிறைவேறினது.

34. மாஜு மதுரையிலிருக்கும் ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் ஹைஸ்கூலின் நிர்வாகப் பொறுப்பு பிராமணரல்லாதார் வசம் இருக்கும்படி செய்யவேணுமாய் ஷை ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் ஹைஸ்கூல் புரோப்ரைட்டரவர்களைக் கேட்டுகொள்ளுகிறது. ஜனாப் மஸ்தான் கனி அம்பலம் இறவுத்தர் அவர்கள் பிரரேபிக்க, திரு. எஸ், இராமச்சந்திரன் சேர்வை அவர்கள் ஆமோதிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

35. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தாங்கள் கட்டியிருக்கும் சத்திரங்களில் (ஏ) பார்ப்பனருக்கு மட்டும் சாப்பாடு போடுவது என்பதை எடுத்து விட்டு எல்லா வகுப்பு ஏழைகளுக்கும் சாப்பாடு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றது, (பி) இனிமேல் நகரத்தார்கள் ஒரு வகுப்பாருக்கு மட்டுமே உபயோகப்படக்கூடிய சத்திரங்களும் பிச்சை எடுப்பதற்கு உபயோகப்படும் வேத பாடசாலைகளையும் கட்டக்கூடாது என்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

திரு. வி. சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு திரு. கூடலிங்கம் பிள்ளை அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது

36. வகுப்புவாரிப்படி தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குச் சர்க்காரின் சகல உத்தியோக சாலைகளிலும், ஸ்தலஸ்தாபனங்களிலும் (ஒடுக்கப்பட்ட மக்களுக்கு) முதலில் உத்தியோகம் கொடுத்து ஆதரிக்குமாறு இம்மகாநாடு வணக்கமாய் கேட்டுக் கொள்ளுகிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்கு குடியிருப்பு, மனை வசதி, ஜல வசதி, தர்க்காஸ்து நிலம் முதலியவைகளைக் கூடுமானவரையில் கிடைக்கும்படி செய்ய இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

திரு. எ. சூசைப் பிள்ளை அவர்கள் பிரேரேபிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

37. (ஏ) நாடகங்கள் புராண சம்பந்தமானவும், குருட்டு நம்பிக்கையும், மூடப்பழக்க வழக்கங்களைக் கொண்டதும் மக்களுள் வகுப்புக்கு வகுப்பு வேற்றுமைகளை கற்பிக்கும் நாடகங்களை நிறுத்திவிட்டு மக்களுள் ஒற்றுமையும் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் உண்டாக்கத்தக்கதான சமூக சீர்திருத்த சம்பந்தமான நாடகத்தை நடத்தி மக்களுக்கு விடுதலை அளிக்கசெய்யவேணுமாய் நாடக ஆசிரியர்களை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

(பி) திருச்சி சுயமரியாதைச் சங்கத்தார் இக் கொள்கையை அனுசரித்து 'சுயமரியாதை அல்லது மூன்று நண்பர்கள்' என்ற நாடகத்தை நடத்தி வருவதற்காக இம்மகாநாடு நன்றி செலுத்துவதுடன் இதற்கு வேண்டிய முயற்சி எடுத்து வரும் திரு. விஸ்வநாத பிள்ளை அவர்களுக்கும் இம்மகாநாடு நன்றி செலுத்துகின்றது.

திரு. சோ. சுப்பிரமணிய முதலியாரவர்கள் பிரேரேபிக்க திரு. வி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆமோதிக்க ஏகமனதாக நிறைவேறியது.

38. மதுரை மங்கம்மாள் சத்திரத்தில் பிராமணர்களுக்கென அறைகள் தனியாக ஒதுக்கப்பட்டிருப்பதை இம்மகாநாடு கண்டித்து அதில் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளும்படியாக மதுரை ஜில்லா போர்டு தலைவரவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

திரு. ரெங்கசாமி நாயுடு அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

39. சுயமரியாதை இயக்கம் தோன்றி ஏறக்குறைய மூன்று வருஷங்களாயினும் அநேக சங்கங்கள் ஏற்பட்டிருப்பினும் அவைகளையெல்லாம் ஒன்று கூட்டுவதற்காகவும் இச்சுயமரியாதை இயக்கத்தை இன்னும் தீவிரமான முன்னேற்றத்திற்கான வழிகளில் நடத்தவும் சுயமரியாதை மாகாண மகாநாடு ஒன்றை கூடியவிரைவில் கூட்ட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

திரு. அழகிரிசாமிநாயுடு அவர்களால் பிரேரேபிககப்பட்டு ஏகமனதாய்நிறைவேறியது.

'திராவிடன்'

### புரோகிதமற்ற முதலாண்டு நிறைவு விழா.

சென்னை பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்துக் காரியதரிசியும், திருநெல்வேலி ஜில்லா கோவாபரேட்டிவ் பாங் செக்ரட்டேரி ஸ்ரீ டி. எஸ். காந்திமதிநாத பிள்ளை அவர்களின் மைத்துனருமான ஸ்ரீ ஆர். வி. சொக்கலிங்கம் பிள்ளை பி. ஏ அவர்கள் தமது செல்வக் குமாரனின் முதலாண்டு நிறைவு சடங்கு [1—6—28) ல் நடைபெற்றது.

ஷை சடங்குக்கு பார்ப்பன புரோகிதமும் கிடையாது. பார்ப்பனராகத் தங்களைக்கருதும் குருக்களின் ஆரவாரமுங்கிடையாது. முதியோர்களே சடங்கை நடத்தி ஆசீர்வாதம் செய்து சமபந்தி விருந்தும் நடத்தினார்கள். இதுவே திருநெல்வேலி ஜில்லாவிற்கு முதல் முதலான சமபந்தி விருந்தென்று சொல்லவேண்டும். இம்முறையை ஏனைய ஜில்லாவாசிகளும் ஆதரித்து ஜாதிக்கட்டினால் மக்கள் துன்பமடைவதை நிவர்த்தி செய்யவேணுமமாய் எல்லாவல்ல இறைவனை அருள்புரிவாராக

சுந்தரம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி முன் சொல்லியாயிற்று. அநேக இராமாயணம், இராமன் சீதையை விவாகம் செய்துகொள்ள ஆசைப்பட்டு வில் வளைக்க முடியாமல் அவமானப்பட்டுப் போனதாகவும் சொல்லுகின்றன. சீதை இராமனைக்கண்டு ஆசைப்பட்டாளென்றும் சீதை ஆசையால் இராமருக்குத் தூக்கம் வரவில்லையென்றும் ஒரு இராமாயணம் சொல்லுகிறது. எப்படியிருந்தாலும், எட்டு வயதில் கலியாணம் பண்ணி பத்து வயதில் பாலகனைப் பெற்று எல்லா பாக்கியத்திற்கும் பாத்தியக்காரர்களைப் பண்ணித் தீருங்கள் என்று நம் தெய்வம் விட்டு விட்டு அவதார மெடுத்துவந்து நமக்கு நடந்து காட்டிக் கொடுத்திருக்காது என்பது நிச்சயமே. இராமாயணத்தில் அநுமாரே முக்கியமானவர். சூரியனிடம் வேதம் படித்தவர்; மாத்துவ மதத்திற்கு குருவுமாவார். ருதுவாகி அநேக காலிருந்த அஞ்சனை என்னும் பெண்ணிடம் வாயுபகவானுக்குப் பிறந்தவர். இவர் சாஸ்திகரா? அநுமாருக்கும் மச்சகந்தி என்னும் மீன் பெண்ணுக்கும் பிறந்த மகன் மகா பலசாலியாய் மயில்ராவணனது சேனாதிபதியாகவு மிருந்திருக்கிறான். அப்படியே ராமர் சாஸ்பித்திருந்தாலும் அவர் நடந்து காட்டினதையெல்லாம் விட்டு விட்டு சுபயோகம் மிருந்த இந்தக்காலத்தில் பாலிய விவாகத்திற்குமட்டும் என் இராமாயணத்தை காட்டவேண்டும்? ஏகபத்தினி விரதத்துடனிருந்து சந்தேகப்பட்டுக் காட்டுக்குப் பெண்ஜாதியை அனுப்பினதோடு இராம அவதாரமும் போய்க் கிருஷ்ண அவதாரமுமெடுத்து (அநேக ஆயிரம் கோபிகளின் பக்தியின் அன்பென்று அதைத்தள்ளிவிட்டாலும்) இரண்டுக்குமேல் ஏழெட்டு பட்ட மகிஷிகளுடைய கிருஷ்ண அவதாரமும் கீதையில் முடிந்தது. பெண்ஜாதி கெர்ப்பிணியாயிருக்கையில் விட்டுவிட்டு சந்யாசம் பெற்ற புத்த அவதாரமும் மங்கிவிட்டது. மூன்று குற்றத்திற்கு மேற்பட்டு நீ செய்வாயானால் உன்னை விட்டு நீங்கிவிடுவேன் என்ற இராமாநுஜ அவதாரத்தின் கொள்கையும் பாழடைந்து வெள்ளைக்கார அவதாரமும் உலகெல்லாம் பரவி கிடக்கும் இந்த யுகத்திற்கும் அந்த யுகத்திற்கும் எப்படிப் பொருந்தும்? இராம அவதாரத்தில் 'நான் நடந்து காட்டிய பிரகாரம் எத்தனை வருடமானாலும் அப்படியே நடவுங்கள்' என்ற ராமர் கட்டளை எந்தக் கதையிலு மில்லை. ராமர் நடந்ததே விதியானால் பின் அநேக அவதாரங்கள் ஏன் உண்டாக வேண்டும்?

பெரியதாயார் வார்த்தையைச் சிரமேற் கொண்டு எல்லா பாக்கியத்தையும் தம்பிக்குக் கொடுத்து ராமன் நடந்து காட்டியதைப்போல் காட்டுக்குப் போகும்படியானவன் எவனோ அந்த சனாதன தருமி இராமயணத்தைப் பிரமாணமாகக் கொண்டு ருதுமதி விவாகம் செய்யவேண்டாம்.

பிரமச்சாரியாக விருந்து வேதம் படித்து கிரகஸ்தாஸ்ரமத்தில் வேத தருமப்பிரகாரம் நடந்து வானப்பிரஸ்தாஸ்ரமத்தில் அதைமுடித்து சந்நியாசஸ்ரமத்தில் மோக்ஷத்தையடைய எவனுண்டோ அவன்தான் சனாதன தருமியென்று பேசலாமே ஒழிய மூன்றுவயதிலேயே அன்னிய சாதையின் எழுத்துக் கற்பிக்கப்பட்டு படிப்படியாய் அன்னிய பாஷையில் தேர்ந்து பலவித சேவகா விருத்தியும் செய்தற்கு படாதபாடெல்லாம் படுவதே தருமமாகவுடைய பாப்பார்கள் இந்த தருமத்தைப்பற்றிப் பேசுவது சுத்திர விரோதம். தன் சாகையை விட்டு அன்னிய சாகையை எந்த துவிஜன் அப்யசிக்கிறானோ அந்த துவிஜன் சூத்திரனாகிறான்; பிரமஹத்தி என்னும் தோஷமும் அவனையடைகிறதென்று பராசஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட பாப்பார்களுக்கு இந்து கர்மமும் தருமமும் என்னவிருக்கிறது. அதிலும், இப்பொழுது உபாத்தியாயர்களும் வக்கீல்களும் சம்மத வயது சட்டமானால் பிராமண தருமம் கெட்டுப்போய்விடுமென்கிறார்கள், அன்னிய பாஷையைப் படித்து அன்னிய சாகையிலே எல்லா விவகாரமும் செய்கிற இவர்களுக்கு இந்து சனாதனதருமம் எப்படிப் பொருந்தும். நம் வேதம் அழிந்தாலும் அதை நமக்குக் கொடுத்த கடவுள் அழியமாட்டார். நாம் பண்ணாது பண்ணியும் நம் கடவுள் நம்மை அடிமையாக இருக்க உத்திரவு செய்வாரேஒழிய நம்மை அழித்துவிடமாட்டார். எழுதிக் கொண்டேபோனால் நீண்டுகொண்டே போகும். குப்பை கூளங்களைச் சமயங்கிடைத்தபோது கிண்டியேயாகவேண்டியிருக்கிறது. நமது பழய கல்வியும் நாகரீகமும் புதிய ஆசையால் அவஸ்தைப்படுகிறது. நவீன கல்விக்கும் நாகரீகத்திற்கும் தகுந்த வாகனமாக நாம் இல்லாததினால் அவை மூளையைவிட்டு வெளியில் ஆண்மையோடு வருவதில்லை. அறிவு மனிதனுக்கெல்லாம் பொதுவென்பதை எல்லா உலகமும் ஒத்துக்கொள்ளுகிறது. எக்காரணம்பற்றியோ அவை நம்நாட்டில் அங்கீகாரம் பெறவில்லை. ராஜிய ஆதர்சங்களாகிய வானத்தில் எறிப்பறக்க நிச்சயித்திருக்கும் நாம் மற்றபடி ஜன வாழ்க்கையில் பின்னே நடப்பதற்கு எத்தனை மடங்கள்? எத்தனை ஆசாரிகள்? எத்தனை சட்டசபை எறிச்சண்டைபோடும் வக்கீல்களின் ஆண்மை எத்தனை? உலகத்திலுள்ள சாமான்கள் நாட்டிற்கும் போகும். பயணத்தட்டுப்பட்டென்ன? பகிஷ்கார வீரமென்ன? 'சீமைக்குப் போனாலும் அங்குள்ள உத்தியோகஸ்தர்களைப் பார்க்கமாட்டோம்' என்னும் பேப்பர் அலங்காரமென்ன? இத்தனைக்கும் தப்பி இந்து தருமம் போனல்லவோ நமக்கும் புண்ணியம் வரும், மனிதனை மனிதன் நம்மையும் மதிப்பான்.


குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் எல்லோரையும் வாங்கும்படி தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்.

இல்வாழ்வை நல்வாழ்வாக
நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில்
இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும்.

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

மூன்றும் பதிப்பு விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். போலி புஸ்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாஸன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கின்றதாவென்று பார்த்து வாங்குங்கள். எமது விலாசம்:—

வாஸன் புஸ்தகசாலை,

244 தங்கசாலை வீதி, தபாற் பெட்டி 119, மதறாஸ்,





நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய, கான்பரன்ஸ்களில் முதல் தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பழனி. சி. எம். சாமி

# குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ. 16. 6 நாள் புட்டி ரூ. 4. வி. பி. சார்ஜ் வேறு

ஒரு பிரபல டாக்டர் சொல்வதைக் கவனியுங்கள்,

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அயச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இவ்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்று அழுதார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமென்னும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி சொஸ்தமான பின்பு அயச்செந்தூரம் பலம் உண்டா[illegible]கக் கொடுத்து வந்தேன். மேற்படியாருக்குபூரணபழையபலம்ஏற்பட்டுவியாதியஸ்[illegible]ம் தங்கள் மருந்துகளின் பெருமையையும அருமையான குணத்தையும் சொல்லி ச[illegible]கிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடித்த பெருமுறை ம[illegible]துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27

பழனி சி. எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் நீரிழிவுக்கு கைகண்டது புட்டி 15ரூ

,, ,, நாகபஸ்பம் மூலத்திற்கு புட்டி 1க்கு 4. ரூ.

பிரமேக நிவாரணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1க்கு 2. ரூ.

பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

## C. மலையப்பசாமி

நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S. I.

சென்னைபிராஞ்சுஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை



ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

# மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வரு[illegible] பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலா[illegible]ளுவ் சொல்லிபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சய[illegible]ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் [illegible] விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முகதேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.



# ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் [illegible] இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.



## டேபில் டைம்பீஸ் இனாம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும்.



இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.



இனாம்! இனாம்

நுனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம்விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.



முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமோஅதுவும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE.
George Town, Madras.



மலையாளம் மதனகாமேஸ்வரி லேகியம்.

பெயர் பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபாற் செலவு 8 அணா. காலண்டரும் கியாட்லாக் இனாம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி K. A.
போஸ்டு முல்லச்சேரி, தென் மலையாளம்


சுயமரியாதை அடைய
பார்ப்பனீயம் ஒழிய,
'திராவிடன்' 'குடி அரசு'
பத்திரிகைகளை வாசியுங்கள்.

வியாபாரிகளே!  கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

## லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாற்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

## வர்த்தகக் கணிதநூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டியது எவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியது எவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் ஷை புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் ஷை புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ 2

வாசன் புஸ்தகசாலை.  நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை



## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பெக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.



பார்த்தீர்களா!  இரகசிய நூல்  படித்தீர்களா!!

ஹிப்னாடிஸ மெஸ்மரிஸ மென்னும்

## மனோவசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0.  ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, ஜார்ஜ் டவுன் போஸ்டு, மதராஸ்.



## திரிமூர்த்தி உண்மை

அல்லது

விலை அணா 12 தேவர்களின் இரகசியம் விலை அணா 12

மூல முதற் கடவுள் மூன்றாகி, மூன்று முப்பத்திமூன்று கோடியாக பெருகின அற்புத இரகசியத்தை அறிய விரும்பாதவரும் உண்டோ? தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத அற்புத நூல். சத்தியார்த்தப் பிரகாச ஆசிரியர் ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் எழுதினது.

கூடன் அண்டு கோ.,  14, பள்ளியப்பன் தெரு, சௌகார்பேட்டை, சென்னை



## பெண்களே

ஆவலாய்விரும்பக் கூடியது! உயர்ந்த மல்லிசு, பச்சை, புளூ, வயலெட், ஆரஞ்சு, கருப்பு, செம்பு ஸ்னப்கலர்கள். கெட்டிச்சாயம். கரையிலும் முந்தியிலும் பூவேலைமானமுள்ள நூதனமாகத்தயார் செய்த புடவை. 18 மு. X 48 இஞ்சு புடவை ரூ. 4—8—0. ஷை பூவேலைமானமில்லாதது ரூ. 4—4—0. ஷை உடல் சிகப்பு அல்லது கருப்பு பல மாதிரி புள்ளிகள் போட்ட சன்னடி புடவை ரூ. 4—8—0. புதிய கேட்லாக் இலவசம்!

The Madura Oriental Trading Co.

Laxmi Colth Store, MADURA.



## ஆநந்த குணபோதினி.

மூன்றாம் வருடம்.

இதுபோன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இதுவரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆயிலமாத சஞ்சிகை [illegible] உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் [illegible], எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதகங்களே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார [illegible] மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங் கொண்ட பெரிய பத்திரிகை இது. ஒன்றரை [illegible] 5000-சந்தாதாரர்களையுடையது. வருட சந்தா ரூ. 1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இலவசம்! இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ் 302, தங்கசாலை வீதி, மதராஸ்.



## பொருள் செய்வகை.

(விலை ரூ. 1)

திரவியோற்பத்தி செய்யும் அநேக இரகசியங்களையுடையது. அநேக வியாபார தந்திரங்களடங்கி யிருக்கின்றன. இது கதையல்ல, நாவலல்ல, கைத்தொழிற் சாஸ்திரமல்ல. மிகுந்த திரவியம் சம்பாதிக்க விரும்புவோர் கற்க வேண்டிய வியாபார சாஸ்திரம். எல்லா வியாபாரிகளுக்கும் அவசியமானது. கிரம வியாபாரம், துணிந்து செய்யும் வியாபாரம், ஒப்பந்த வியாபாரம், முதலில்லாமற் செய்யும் வியாபாரம், தினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறியும் விவரம், இன்னும் அநேக இரகசியங்களும் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் உதவியால் ஏராளமான திரவியத்தை சம்பாதிக்க வல்லவராவார்கள்.

### ஸத்ய தேவி

அல்லது

### தர்ம சங்கடம்.

பிரஞ்சு பாஷையில் மிகப் பிரசித்திபெற்ற கொர்னேய் என்பவரால் எழுதிய சரித்திரங்களில் ஒன்றை அநுசரித்து இந்த ஸத்ய தேவி எழுதப்பட்டிருக்கிறது. வாசிக்க வாசிக்க மிகவும் இன்பத்தைக் கொடுக்கும். அருமையான படங்கள், இனிய காதல், ஒப்பற்ற வீரம் இவைகள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற நாவல் இதுவே. இதன் விலை ரூபாய் 1.  தேவி ஆஸ்ரமம், திரௌபதை அம்மன் கோவில் வீதி, புதுச்சேரி.


[illegible] "[illegible]" அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்று [illegible]